பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 தை 08 செவ்வாய்க்கிழமை (22.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 57

### போர் நிறுத்தம் முறிந்ததால் மக்களுக்கே அதிக பாதிப்பு

# அரசு அனுசரணைக்கு அழைப்பின்

# நோர்வே இப்போதும் அதற்குத் தயார்!

## ஹன்சன் பௌவர் சொல்கிறார்



கொழும்பு, ஜனவரி 22

போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை அரசாங்கம் முறித்துக்கொண்டாலும், விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்குத் தயார் என்று அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருப்பதை நான் அறிவேன்.

எனினும், எமக்கு இதுவரை எவ்வித அழைப்பும் வரவில்லை. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் முயற்சியில் மீண்டும் ஈடுபட விருப்பம் கொண்டு அனுசரணைப் பணிக்கு எமக்கு அழைப்பு விடுத்தால் அதனைச் செய்வதற்கு நோர்வே இப்போதும், எப்போதும் தயார்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் சமாதானத்துக்கான விசேட தூதுவர் ஹன்சன் பௌவர்.

டென்மார்க்கில் இருந்து வெளிவரும் ஸ்பீஜெல் இணையத்தளத்துக்கு நேற்று அளித்த விசேட - நீண்ட - செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் அந்நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமாக எமது பங்குபணி குறித்து இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் உத்தரவாதங்களை நிறைவேற்றுவதில் நாம் அக்கறையாகவே உள்ளோம்.

அவர்கள் எங்கள் சேவையை - உதவியை

(10ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைநிலையம் மீது நேற்று மாலை தாக்குதல்: 3 பொலிஸார் பலி!

கொழும்பு, ஜன. 22

மொனறாகலை மாவட்டத்தில் தனமல்விலவில் உள்ள இற்றுக்கோட்டை பொலிஸ் சோதனை நிலையம் ஒன்று நேற்று மாலை 6 மணிக்கு தாக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்தில் சப் இன்ஸ்பெக்டர் உட்பட மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர் என்று மேற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் இன்று திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கான புதிய அலுவலகம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

யாழ். பொலிஸ் நிலைய வளாகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணிக்கு புதிய அலுவலகம் திறந்து வைக்கப்படும். (அ)

## மொனறாகலையில் ஆயுதங்கள் மீட்பு

மொனறாகலைப் பிரதேசத்தைச் சேர்ந்த தோட்டப் பகுதிகளில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது வெடிபொருள்கள், ஆயுதங்கள் பல மீட்கப்பட்டுள்ளன என மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் எச்.என்.பி.அம்பன்வெல

(10ஆம் பக்கம் பார்க்க)

# யார் எதிர்த்தாலும் ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் தீர்வு யோசனை!

### அமுல் படுத்தப்படும் என்கிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜனவரி 22

அனைத்துக்கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமான திஸ்ஸ விதாரணவினால் நாளை புதன்கிழமை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். அரசின் இடைக்கால தீர்வு யோசனைகளை நாடாளுமன்றில் பெரும்பான்மை வாக்களிப்புக்கு விடாது ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் செயற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

கொழும்பு, கிருலப்பனையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயகக் குழுவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் ராஜித சேனாரட்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் மட்டும் தீர்வு யோசனைகள் செயற்படுத்தப்படுவதால் ஜே.வி.பியின் எதிர்ப்புக் குறித்து எவரும் கவலைப்படத் தேவையில்லை. முஸ்லிம் கட்சிகளினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் ஆதரவு இதற்கு உண்டு. இந்தியாவும் ஆதரவளிக்கிறது என்றும் அமைச்சர் கூறினார்.

தற்பொழுது முன்வைக்கப்படும் தீர்வு யோசனைகள் முன்னைய காலங்களில் முன்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால அறிக்கைக்கு இறுதிவடிவம் கொடுக்க தெரிவுக்குழு இன்றும் கூடுகிறது

கொழும்பு, ஜன. 22

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைகள கொண்ட இடைக்கால அறிக்கையை பூர்த்தி செய்வதற்காக அனைத்துக்கட்சிகளின் தெரிவுக்குழு மீண்டும் இன்று கூட உள்ளது.

இடைக்கால அறிக்கையை இறுதியாக்குவது குறித்து ஆராய்வதற்காக தெரிவுக்குழு நேற்று மாலை கூடியது. எனினும் அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுக்க முடியாத நிலையில் அது கலைந்தது.

கடந்த வாரம் அனைத்துக் கட்சிகளின் தெரிவுக்குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் உறுப்பினர்களை ஜனாதிபதி சந்தித்திருந்தார்.

அப்போது நாளை அதாவது 23ஆம் திகதி இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார்.

இதன் பிரகாரம் நாளை இடைக்கால அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்க வசதியாக அறிக்கையை பூரணப்படுத்துவதற்காக அனைத்துக் கட்சிகளின் தெரிவுக் -குழு நேற்று மாலை கூடியது.

அறிக்கையில் சேர்க்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாக மேலும் ஆராயவேண்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் ஆறு இளைஞர்கள் ஞாயிறு கைது

கொழும்பு, ஜன 22

கொழும்பு வெள்ளவத்தை மெனிங் வீடமைப்புத் திட்டத்தில் தங்கியிருந்த ஆறு தமிழ் இளைஞர்கள் கடந்த ஞாயிறன்று சந்தேகத்தின் பேரில் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிவகாந்தன் (வயது-25), அன்ரன் (வயது - 20), ராஜீவ் (வயது - 25), யோகதீபன் (வயது-31), செந்தூரன் (வயது - 25), சுகந்தன் (வயது - 25) ஆகிய அறுவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவ்விடயம் குறித்து பிரதி அமைச்சர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளைத் தடை செய்வது அமைச்சரவையில் ஆராயப்படும்

கொழும்பு,ஜன.22

அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை நாளை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அதன் பின்னர் அரசு விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கும். புலிகள் மீதான தடை குறித்து அமைச்சரவையில் விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

- இவ்வாறு அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து மேலும் தெரியவந்துள்ளமை வருமாறு:-

(10ஆம் பக்கம் பார்க்க)

### மட்டு உள்ளூராட்சி தேர்தல்

## இடைக்காலத் தடைவிதிக்க கோரிய மனு உயர் நீதிமன்றத்தால் நேற்று நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 22

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தேர்தலைப் பிற்போடுவதற்கான இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் நேற்று தெரிவித்திருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டதை இடைநிறுத்துமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதம நீதியரசர் சரத் . என். சில்வா இதனைத் தெரிவித்தார்.

மனு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டவேளை சட்டமா அதிபர் எதிர்ப்பை வெளிக்காட்டினார். சமர்ப்பிக்கப்பட்ட மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிட்ட அமைச்சர்களினதும் அல்லது தெரிவத்தாட்சி அதிகாரியினதும் பெயர்கள் குறிப்பிடாமல் இந்த மனுவைத் தாக்கல் செய்ய முடியாது.

கிழக்கு மாகாணத்தில் வேட்பு மனுக்கள் தாக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் சுடப்பட்டு இளைஞன் நேற்றுப் பலி

யாழ்ப்பாணம், ஜன 22

யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் வைத்து நேற்று முற்பகல் 10.30 மணியளவில் 19 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பல்கலைக்கழகத்தின் வடக்குப் பக்க வாசல் ஊடாகச் சென்ற இருவர் பிரஸ்தாப இளை

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மகாராஷ்டிராவில் பஸ் விபத்து: 36 பேர் உயிரிழப்பு; பலர் காயம்

நாசிக், ஜன.22

மகாராஷ்டிரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு அளவுக்கு அதிகமாக பயணிகள் ஏறியதால் கட்டுப்பாட்டை இழந்து 600 அடி ஆழ பள்ளத்தில் பஸ் கவிழ்ந்ததில் 36 பேர் பலியானார்கள். 40 பேர் காயங்களுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மும்பை நகரின் புறநகர் பகுதியில் உள்ள வாராலி என்ற இடத்தைச் சேர்ந்த 76 பேர் தனியார் ஆடம்பர பஸ்ஸை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு நாசிக் மாவட்டத்தில் உள்ள சப்தஷிருங்கி கோவிலுக்கு சென்று விட்டு திரும்பிக் கொண்டிருந்த நேரத்திலேயே இந்த அனர்த்தம் சம்பவித்தது.

இந்த விபத்தில் 12 பெண்கள், 4 குழந்தைகள் உட்பட 36 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். காயம் அடைந்த சாரதி உட்பட 40 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அளவுக்கு அதிகமானவர்கள் சென்றதால்தான் பஸ் விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

PC SOLUTIONS
Our Strength is Your Satisfaction
PC SOLUTIONS
Computer Sales & Maintenance Centre
527/1, Navalar Road (TCT Upstair), Jaffna.

யாழ்.நகரில் புதியதோர் உதயம்
நிகழும் சர்வசித்து ஆண்டு தைத் திங்கள்
22 ஆம் நாள் தைப் பூச நாளன்று
முற்பகல் 9.10 மணியளவில்
திரு.எஸ்.கமலநாதன்
[பணிப்பாளர், தியாகி அறக்கொடை நிறுவனம்]
அவர்களால் திறந்து வைக்கப்பட்டு
இருக்கின்றது.
அனைவரும் வருவீர்! ஆதரவு தருவீர்!

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தங்கம்மா மயிலுப்பிள்ளை

**(இளைப்பாறிய ஆசிரியை - சாவகச்சேரி)**

கோப்பாய் வடக்கு, பிராமணோடையை பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகக் கொண்டிருந்தவரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியையுமான திருமதி தங்கம்மா மயிலுப்பிள்ளை அவர்கள் கடந்த 18.01.2008ஆம் திகதியன்று சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி சின்னப்பா - கதிராசிப்பிள்ளை அவர்களின் கனிஸ்ட புத்திரியும் நுணாவில் சந்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகளும் இராசையா மயிலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் றஞ்சினிதேவி, சிவாஜினி (கனடா), மனோகரன் (சுவிஸ்), பாஸ்கரன் (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயும் கிருஷ்ணானந்தலிங்கம், கணேசலிங்கம் (கனடா), நளினி (சுவிஸ்), செல்வநந்தினி (நியூசிலாந்து) ஆகியோரின் நேசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை வேதவனம் (ஓய்வுபெற்ற அதிபர்), செல்லையா Dr.இராஜரட்ணம் மற்றும் செல்லம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), தவேந்திரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அற்புதமலர், பிறேமாவதி, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் லலிதாமணி (கனடா), கண்ணகைப்பிள்ளை (சுவிஸ்), தம்பையா, பரராஜசிங்கம், கருணாவதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பிரஷாந், டிலக்ஷனா, தர்மிகன், லக்ஷிகா (சுவிஸ்) கனடாவில் வதியும் விதுஷன், லக்ஷன், மதுஷன் மற்றும் விதுர்னா (நியூசிலாந்து) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் 22.01.2008 இன்று அஞ்சலிக்காக வைக்கப்பட்டு புதன்கிழமை 23.01.2008 அன்று மு.ப 11 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 2 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.மயிலுப்பிள்ளை (கணவர்)
திரு திருமதி கிருஷ்ணானந்தலிங்கம் (மகள், மருமகன்)

16,1/4, Chapel lane, Wellawatte,
Colombo - 06
T.PHONE NO : 011 2588150.
077 5860002, 0777 464901, 077 6164038

(சி/551166)

### திருமதி ஜெயலட்சுமி சிவலிங்கம்

*(அநாகிஅம்மா)*



ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், பிரதான வீதி, மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (பிரசித்த நொத்தாரிசு) அவர்களின் மனைவி திருமதி ஜெயலட்சுமி சிவலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார்

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி.இளங்கீரன் (மகன்)**
ஆசிரிய ஆலோசகர் தீவக கல்வி வலயம்.

*134, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

## தவறிவிட்டது

**கொன்சாள்ஸ் நிரோஜினி என்பவருடைய கண்டி முகவரி உடைய தே.அ.அட்டை (865953232V) ஓட்டுமடச் சந்தியில் 20.01.2008 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 332/18 கடற்கரை வீதி, நாவாந்துறை எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

T.P 0776393456, 2225966

## பூரணை விழா

தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் பூரணை விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.22

அராலி தெற்கு ஆகாயக்குளம் விநாயகர் ஆலயத்தில் இன்று தைப்பூசத்தை ஒட்டி சமய தீட்சை வழங்கலும் அறிநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் காலை 8 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

ஆலய அறங்காவலர் க. செந்தில்நாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.செல்வராசக் குருக்கள் தீட்சை வழங்குவார்.

* * *

வலி.தென்மேற்கு,ஜன.22

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை தைப்பூசத்திருவிழா நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகம் மற்றும் பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

(202-135)

* * *

யாழ்ப்பாணம், ஜன.22

இணுவில் கந்தசுவாமி கோயிலில் இன்று தைப்பூசத்தை ஒட்டி மஞ்சத்திருவிழா இடம்பெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு சங்காபிஷேகம், பிற்பகல் 3 மணிக்கு வசந்த மண்டபபூசை, 3.30 மணிக்கு சண்முகர் அர்ச்சனை, 4மணிக் கும் மஞ்சத்திருவிழா ஆகியன இடம்பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.22

நயினை நாக பூசணி அம்மன் ஆலயத்தில் தைப் பூசத்தை ஒட்டி இன்று மஞ்சத் திருவிழாஇடம் பெறும்.

விசேடபூசை வழிபாடுகள், வேத பாராயணம், திரு முறை ஓதல், ஏடு தொடக்குதல் ஆகியனஇடம்பெறுவதுடன் மஞ்சத்தில் அம்பாள் திரு வீதியுலா வருவார். அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

* * *

யாழ்ப்பாணம், ஜன22

வண்ணை, கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானத்தில் கும்பாபிஷேக தினத்தைஒட்டிஅஸ்டோத்திர சங்காபிஷேகம் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சங்காபிஷேகத்தையடுத்து காளியம்பாள் உள்வீதி வலம் வருவார்.(-1)

* * *

யாழ்ப்பாணம், ஜன22

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் இன்று தைப்பூசத்தினத்தன்று திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய நாயன்மார்களுக்கு மதியம் 12.15 மணிமுதல் 1.30 வரையுள்ள சுபவேளையில் நூதன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந் நாயன்மார்கள் விக்கிரகங்களை அன்பளிப்புச்செய்த இவ்வாலயத்தில் இயங்கும் சைவ சமய அபிவிருத்திக் கழகம் கும்பாபிசேக நிகழ்வுகளுக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது. (1)

## போதனாசிரியர்கள்/ உதவிப்போதனாசிரியர்கள் பதவி வெற்றிடம்

**உலகக் கனேடிய பல்கலைக்கழக சேவைநிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட சர்வோதயத்தால் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள கீழ்க்குறிப்பிடும் தொழிற் பயிற்சிகளுக்கான போதனாசிரியர்கள்/ உதவிப்போதனாசிரியர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**விண்ணப்பதாரிகள் சம்பந்தப்பட்ட தொழிற்பயிற்சியில் 3 வருடத்திற்கு மேல் அனுபவமுள்ளவராகவும் குறிப்பிட்ட தொழிற்பயிற்சியில் சான்றிதழ் பெற்றுள்ளவராகவும் 18 - 45 வயதிற்கிடைப்பட்டவராகவும் க.பொ.த (சா/தர, உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும்.**

**தகுதியுடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 28.01.2008ஆம் திகதிக்குள் "மாவட்ட இணைப்பாளர், சர்வோதய மாவட்ட நிலையம், 3, பிளச்சர்ஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.**

**தொழிற்பயிற்சி**
1. மின் ஒட்டுதல் (Welding )
2. வீட்டு மின்சார இணைப்பு (Electrical House Wiring)
3. கைத்தொலைபேசி திருத்தல் (Hand Phone Repair)

*தகுதியுடையவர்கள் மட்டும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.*

*சர்வோதய மாவட்ட நிலையம்,*
*சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.*
*21.01.2008*

**அ.கி.சிவசுப்பிரமணியம்**
*மாவட்ட இணைப்பாளர்.*

(சி/551171)

## கண்ணீர் அஞ்சலி

15.01.2008 இறைபதம் எய்திய, எமது பாடசாலை ஆசிரியை திருமதி ரேணுகா சிவராசா அவர்களின் அன்பு மைத்துனி

### அமரர் இராணி சோமசுந்தரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்

(70392)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் மத்தியஸ்தரான

### அந்தோனி செபமாலைமுத்து

அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம். (சி/551162)

ஒன்று
நெல்லியடி மண்ணில்
தோகலமாக காலடி எடுத்து வைக்கின்றான்
PC PARK (PVT) LTD.
நிகழும் தைத் திங்கள் 22.01.2008 தைப்பூச திருநாளன்று
காலை 11.05 - 12.35 மணிவரையுள்ள சுபநேரத்தில்
பருத்தித்துறை வீதி, நெல்லியடியில்,
PC PARK (PVT) LTD.
நெல்லியடி
எமது கிளைக் காட்சியறை ஆரம்பித்து வைக்கப்படுகின்றது என்பதை
அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.
ஆரம்ப வைபவத்திற்கு எமது அன்பர்கள், நண்பர்கள், அபிமானிகள்
அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
எமது நெல்லியடி காட்சியறை திறப்பு விழாவை முன்னிட்டு
நெல்லியடியில் pc park பெருமையுடன் வழங்கும்.....
1GB Rs.1200/-
அதிரடி விலைக்கழிவு
2GB Rs.2000/-
4GB Rs.3500/-
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.
தொ.பே:-0773951628
130ஏ, காலி வீதி,
தெகிவளை.
தொ.பே:-011 2714115
தொ.ந:-011 2713423
இல. 633, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 -2229581
தொ.ந:-021 -2229581

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# யதார்த்தமாகச் சிந்திக்கக்கூடாதா?

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் லூயிஸ்ஆர்பர் அம்மையாருக்கு எதிராகக் கொழும்பில் நாளை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு ஜாதிக விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) ஏற்பாடு செய்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதனை முன்னின்று நடத்தவிருப்பவர் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ. ஆவேசமாகப் பேசுவதிலும், தமது ''கோணங்கி'' நியாயங்களை முன்னிலைப்படுத்தி மக்கள் ஆதரவைத் திரட்டுவதிலும் ''கெட்டிக்காரர்'' என்ற பெயரும், மதிப்பீடும் அவருக்கு உண்டு. இது பரவலாகவும் பொதுவாகவும் பேசப்படுவதும் உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக இனவாதத்தைக் கொட்டுவதிலும் அவர் பலே போவழி.

இலங்கையில் தொடரும் வன்முறைகளால் பொதுமக்கள் காயமடைந்தால், இலங்கை அரசைச் சர்வதேச நீதிமன்றத்துக்கு அழைத்து விசாரிக்க வேண்டும் என்று லூயிஸ் அம்மையார் கூறியிருந்தார். அந்தக் கூற்று வீரவன்ஸவுக்கும் ஜே.வி.பிக்கும் கடுப்பேற்றி உள்ளது.

இலங்கை அரசையோ அல்லது இந்நாட்டு இராணுவ அதிகாரி எவரையுமோ சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்த நாம் அனுமதிக்கமாட்டோம் - என்று வீரவன்ஸ சூளுரைத்துள்ளார்.

சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் இலங்கை அரசு நிறுத்தப்பட்டாலே போதும்; தீர்ப்பு அல்லது குற்றச்சாட்டு சம்பந்தமான அறிக்கை எதனையும் அது பாதகமாக வெளியிட்டுவிட்டால், அதன் பின்னர் இந்த நாடு மொட்டாக்குப் போட்டுக்கொண்டே சர்வதேசத்தில் நடமாட நேரிடும். இதனைத் தடுப்பதற்கு இலங்கையின் பிரஜை-அரசியல் தலைவர்-என்ற வகையில் அவர் ஆர்பர் அம்மையாரை எதிர்க்கவும் திட்டவும் முன்வந்திருக்கின்றார் என்று கொள்ளலாம்.

ஆர்பர் அம்மையார் எந்தச் சந்தர்ப்பத்தில் தமது கருத்தை வெளியிட்டார் என்பதை நோக்குவது உகந்தது. ஆறு வருட காலமாக நடைமுறையில் இருந்த இலங்கையின் போர் நிறுத்த ஒப்பந்தத்தை, அரசாங்கம் தன் மனம்போன போக்கில் முறித்துக் கொண்டு மக்களின் பேரழிவுக்கும், மனிதாபிமானப் பணிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவும் வகைசெய்திருக்கிறது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளப் போவதாக -அதிலிருந்து விலகிக்கொள்ளப் போவதாக - சாடைமாடையாக அரசு சமிக்ஞை காட்டத் தொடங்கிய காலத்திலேயே -அதனால் ஏற்படப் போகும் பெரும் தீங்குகளை, மனிதாபிமானத்திலும் மனித நேயத்திலும் அக்கறை கொண்ட சகல தரப்புகளும் எடுத்துக் கூறிவந்தன.

ஆனால், இலங்கை அரசு அது குறித்து கிஞ்சித்தும் அக்கறைப்பட்டதாக இல்லை. போர் நிறுத்தத்தை முறித்து, தமிழ்ப் பகுதிகள் மீதான இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்தினால் அழியப்போவது, அவலப்படப் போவது தமிழ் மக்கள்தானே என்ற உள்மனதுடன் தான் நினைத்ததைச் செய்தது.

நான்காம் கட்டப் போர் ஒன்று வெடித்தால் அது முந்தியவற்றைவிட நெருக்கடி மிக்கதாகவும்,பெரும் அழிவுகளைத் தருவதாகவும் இருக்கும் என்று பல தரப்பினரும் எடுத்துக் கூறியிருந்தனர். ஆனால் அது குறித்து அரசாங்கம் மட்டுமின்றி அதற்கு முண்டு கொடுக்கும் அல்லது மறைமுக ஆதரவு கொடுக்கும் ஜே.வி.பி.போன்ற கட்சிகள் கூட செவிசாய்க்கவில்லை; பொருட்படுத்தவில்லை.

இலங்கை அரசு போர் நிறுத்தத்தை முறித்துக் கொண்ட பின்னர், கவலை தெரிவித்து அறிக்கைகள் வெளியிட்ட ஜப்பான் உட்பட்ட நாடுகள் கூட, போர் மீண்டும் மூள்வதால் உண்டாகக் கூடிய பேரவலங்கள் குறித்துச் சுட்டிக் காட்டியிருந்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விவகாரத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளில் ஒருவர் என்ற வகையில், ஆர்பர் அம்மையார் கூறிய மனிதாபிமானத்துடன் கருத்தை ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரால் ஜீரணிக்க முடியவில்லை. அம்மையாரின் கருத்துக்கு ''பயங்கரவாதத்துக்கு ஆதரவானது'' என்று சாயம் பூசி அதனைப் பெரும் விவகாரமாக்க முயற்சிக்கிறார்!

போர் நடைபெறும் வேளையில் மனித உரிமைகள் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்று அரசின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே வெளிப்படையாகக் கூறியிருக்கின்றனர். அவ்வாறிருக்க, போர் வெடித்தால் மனித அவலம் பெருகிவிடும் என்று ஆர்பர் அம்மையார் கூறிய கருத்துக்குப் பயங்கரவாதச் சாயம் பூசி அதனைப் பூதாகாரமாக்கி அரசியல் லாபம் தேட நினைப்பதும் ஒருவகை அரசியல்தான்!

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படாமல் இருப்பதைக் கண்காணிப்பதற்கு, ஐ.நா.மனித உரிமைக் கண்காணிப்பகம் நிறுவப்படுவதனைத் தலைப்பாகை கட்டிக்கொண்டு எதிர்ப்பவர்கள், அத்தகைய ஓர் அமைப்பு இங்கு இயங்கும் பட்சத்தில் சர்வதேசமோ, சர்வதேச அதிகாரிகளோ இலங்கை அரசைக் கண்டிப்பதற்கும் குறை கூறுவதற்கும் இடம் இருக்காது என்பதனை யதார்த்தமாகச் சிந்திக்கத் தவறியது ஏனோ?

தமது அரசியல் சித்தாந்தங்களுக்கும் நடைமுறைக் கொள்கைகளுக்கும் தடம் மாறல்களுக்கும் எல்லோரும் ஒத்து ஊதுவர் என்று நினைப்பது துர்லபமே!

# இன்னும் 2 வாரங்களில் மடுப்பகுதியை கைப்பற்றுவதற்கு இராணுவம் கங்கணம்

## இனிவரப்போகும் போர் வித்தியாசமானதாக இருக்குமாம்

கொழும்பு,ஜன.22

இன்னும் இரண்டு வார காலத்தில் மடுப்பிரதேசத்தைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற இலக்கோடு, இராணுவத்தினர் அப்பகுதியில் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருக்கின்றனர்.

இப்போதுள்ள நிலையில் இனிவரப்போகும் போர் வெகு வித்தியாசமானதாகவும் மிகப்பயங்கரமானதாகவும் இருக்கும்.

இவ்வாறு தெரிவிக்கின்றார் பிரபல இராணுவ ஆய்வாளரும் விமர்சகருமான இக்பால் அத்தாஸ்.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இதழில் வெளிவந்த தமது பத்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் வெளியிட்டிருக்கும் தகவல்கள் கருத்துக்களின் ஏனைய முக்கிய பகுதிகள் வருமாறு:-

போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கம் கைவிட்டதையடுத்து- அதனைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் இல்லாத நிலையில்- அரச படைகள் வன்னியிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகள் மீதான தமது தாக்குதல்களை மும்முரப்படுத்தி வருகின்றன. இராணுவரீதியில் புலிகளைத் தோற்கடித்து அவர்கள் வசமுள்ள நிலப்பரப்புக்களைக் கைப்பற்றுவதே அவர்களின் நோக்கமாகும்.

கடந்த கால வரலாற்றைப் பார்க்கையில் புலிகள் இராணுவ நெருக்குதல்களுக்குள்ளாகும் சமயங்களில் எல்லாம் வடக்கு, கிழக்கில் போர் நடக்கும் பிராந்தியத்திற்கு வெளியில் மோதல்களை நகர்த்தி விடுவதை அவர்கள் தந்திரோபாயங்களாகப் பயன் படுத்தி வந்துள்ளார்கள். அரச படைகள் இப்போது மீளக் கைப்பற்றுவதற்கு எத்தனிக்கின்ற பகுதிகள் காலாவதியாகி விட்ட போர்நிறுத்த உடன்பாட்டின் வாயிலாகவே ஏற்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த ஆறு வருடங்களாக அப்பகுதி முழுவதும் புலிகளினால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன், எவ்வாறேனும் அதனைத் தற்காத்துக்கொள்ள அவர்கள் உறுதி கொண்டுள்ளார்கள்.

இந்த முறையும் அதில் மாற்றமில்லை. ஆனால் சிவிலியன்கள் மீதான குரூரமான இலக்குகளைத் தவிர. சில தினங்களுக்கு முன் ஒக்கம்பிட்டியாவில் பஸ் மீதான கிளைமோர் குண்டுவெடிப்பு நடத்தப்பட்டுள்ளது. மொனறாகலையில் மேலும் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்தவகையில் மிகவும் அச்சம் கொள்ளப்பட்டிருந்த நான்காவது ஈழப் போர் ஆரம்பமாகிவிட்டது.

புலிகளைப் பலவீனப்படுத்துவதும் வன்னியைக் கைப்பற்றுவதும் அவர்களின் இறுதிநோக்கம்; இதில் சந்தேகமில்லை. அரசியல் தலைவர்களும் அரச அதிகாரிகளும் இதைப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். இதற்கு இந்த வருட முடிவை இறுதிக் காலக்கெடுவாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வன்னியில் வெகுவாக முன்னேறி விட்டதா.. வும் இன்னும் இரண்டு வாரங்களில் மடுமாதா கோவில் பகுதியைக் கைப்பற்றிவிடலாம் என்றும் இராணுவத்தினர் கூறிவருகிறார்கள். ஆனால் இராணுவம் அதற்கப்பாலும் சென்று விடத்தல்தீவிலுள்ள கடற்புலிகளின் தளத்தையும் கைப்பற்றும் நோக்கம் வைத்திருக்கிறார்கள் என்பதைப் புலிகள் கண்டுகொண்டுவிட்டார்கள்.

சிலவாத்துறையை இராணுவம் கைப்பற்றியதிலிருந்து விடத்தல்தீவு தான் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. மன்னாருக்குத் தெற்கில் அமைந்துள்ள இந்தத் தளம் தமிழ்நாட்டிலிருந்து பொருள்களைக் கடத்திவந்து சேர்க்கும் துறையாகப் பயன்பட்டுவந்தது. இதைக் கைப்பற்றினால் மேலும் ஒரு விநியோகத் தளத்தை அவர்கள் இழந்து விடுவார்கள், பலவீனமுறுவார்கள் என்று இராணுவத்தினர் நினைக்கிறார்கள். தமிழ் நாட்டுடான இலகு தொடர்புகளும் அறுந்து போய் விடும் என்று நம்புகிறார்கள்.

### அதிக காலம் பிடிக்காது

இதேவேளை அப் பகுதி முழுவதையுமே இராணுவம் கைப்பற்றுவதற்கு அதிககாலம் பிடிக்காது என்று மன்னார் பகுதியிலுள்ள உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் நம்புகிறார்கள். இதற்கு ஆதாரமாக இறந்துபோன பெண் போராளி ஒருவர் தமது பெற்றோருக்கு எழுதிய கடிதம் ஒன்றை அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். அக்கடிதம் உரியவர்களுக்குச் சென்றடைய முன் அப் போராளி கொல்லப்பட்டு விட்டார். போர்க்களத்தில் குடிக்க நீரில்லை உணவில்லையென்றெல்லாம் கடிதத்தில் அவர் எழுதியிருந்தாராம். அதே சமயம் அதிரடிப்படைகளின் பலத்தை அதிகரித்திருப்பதையும் இராணுவத்தினர் சுட்டிக் காட்டுகின்றனர் - இவ்வாறு அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார். (ப)

# இலக்கிய விருதுக்கு நூல்கள் தெரிவு

யாழப்பாணம், ஜன.22

இலங்கை இலக்கியப் பேரவை வருடாவருடம் செயற்படுத்திவரும் இலக்கிய விருது வழங்கலுக்கு இவ்வருடம் 2006, 2007 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நூல்களைத் தெரிவு செய்யவுள்ளது.

சிறுகதை, கவிதை, காவியம், நாடகம், சிறுவர் இலக்கியம், பல்துறை, சமயம் ஆகியவை சார்ந்த நூல்களை குறிப்பிட்ட ஆண்டில் வெளியிட்ட நூலாசிரியர்கள் நூலின் ஒரு பிரதியை விருதுத் தேர்வுக்காக எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன் 'சி.சிவதாசன், செயலாளர்,இலங்கைஇலக்கியப்பேரவை, இல 58, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு தபாலிலோ, நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# ஓய்வூதியர்களின் விவரம் இணையத்தளத்தில்

யாழ்ப்பாணம், ஜன.22

இலங்கையிலுள்ள4 லட்சத்து 23 ஆயிரம் ஓய்வூதியர்களின் விவரங்கள் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஓய்வூதிய கொடுப்பனவு விவரங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களது சுயவிவரங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

மேற்படி விவரங்களை www.pensions.gov.lk எனும் இணையத்தள முகவரியூடாகப் பெற்றுக் கொள்ளலாம். பொது நிர்வாக அமைச்சும்-ஓய்வூதிய திணைக்களமும் இணைந்து இத்திட்டத்தைநடைமுறைப்படுத்திவருகின்றன.

இதேவேளை வடக்கு-கிழக்கு மாகாண ஓய்வூதியர்களின் விவரங்களும் விரைவில் இணையத்தள முகவரியில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-95)

# விவசாயப் போதனாசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.22

வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் விவசாயப் போதனாசிரியர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் பி.பகல் 12.15 மணிக்கு திருநெல்வேலி பலாலி வீதியிலுள்ள பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் பரீட்சைக்குத் தோற்றி சித்தி பெற்ற பரீட்சார்த்திகளும் இந்த நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை விவசாய பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## நாளை

| | |
|---|---|
| தை - 9 | புதன்கிழமை 23.01.2008 |
| நட்சத்திரம் : | பூசம் மு.ப.:11.39 வரை |
| திதி : பிரதமை | மு.இ.: 07.11 |
| சுபநேரம் : | 05.06 - 06.36 |
| ராகுகாலம் : | 12.36 - 02.06 |

# யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்ட 211 பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன

## யாழ்.செயலக மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்

யாழ்ப்பாணம், ஜன.22

யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் யாழ்.மாவட்டத்தில் 334 பகுதிகளை மிதிவெடி அபாயப் பிரதேசங்களாக உறுதிப்படுத்தியுள்ளது. அவற்றுள் 211 பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பான பகுதிகளாக மக்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அந்த அலுவலகம் விடுத்துள்ள தகவல்கள் வருமாறு:

யாழ்ப்பாணத்தில் 1999 ஆம் ஆண்டு தொடக்கம் அடையாளம் காணப்பட்ட 700 இற்கும் மேற்பட்ட மிதிவெடி அபாயப் பிரதேசங்களில் தொழில்நுட்ப மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்மூலம் இதுவரை 334 பகுதிகள் மிதிவெடிப் பிரதேசங்களாக உறுதிப்படுத்தப்பட்டு 211 பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

மிகுதியாக உள்ளவை இன்னும் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளன.

வலிகாமம் வடக்கு, நல்லூர் தெற்கு, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் தென்மராட்சி தெற்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தால் அனுமதியளிக்கப்படாத பிரதேசங்கள் தவிர ஏனைய பிரதேசங்களில் அனேகமாக மிதிவெடிகள் இனங்காணப்பட்டுள்ளன.

இவ்வருட இறுதிக்குள் இப்பிரதேசங்கள் பாதுகாப்பான பிரதேசங்களாக மாற்றப்படும் என்பதை இலக்காகக் கொண்டு எமது அலுவலகம் செயற்பட்டு வருகின்றது - என்றுள்ளது. (202)

# செட்டிபுலம் மீனவர்கள் 16 மாதங்களாகத் தொழிலின்றி பொருளாதார நெருக்கடிக்குள்

யாழ்ப்பாணம், ஜன.22

கடந்த 16 மாதங்களுக்கு மேலாக வேலணை செட்டிபுலம் மீனவர்கள் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இதனால் 150 குடும்பங்கள் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் பட்டினி நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

செட்டிபுலம் (வேலணை) கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர் பிரதேச செயலர் ஊடாக வேலணை கடற்படை பொதுசன தொடர்பு அதிகாரியின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த 11.08.2006 தொடக்கம் இதுவரை செட்டிபுலம் பகுதி மீனவர் கடற்றொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை.

ஏனைய பிரதேசங்களில்- குடாநாடு மற்றும் தீவகப் பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

தொழில் அற்ற எமக்கு அரச சமுர்த்தி நிவாரணம் மட்டும் கிடைக்கின்றது.

இந்த நிவாரணம் ஒரு சில-சவர்க்காரம், தேயிலை போன்ற பொருள்களை மட்டுமே கொள்வனவு செய்யப் போதுமானது.

எமது வறுமையைப் போக்க நலிவுற்றோர் நிவாரணம் அல்லது மீன்பிடித் தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்க வேண்டும்.


கடந்த ஒன்றரை வருட காலமாக எமது பிரச்சனை தொடர்பாக பிரதேச செயலருக்கும், அரசாங்க அதிபருக்கும் அறிவித்துள்ளோம்.

எனவே எமது வறுமையை போக்க நிவாரணம் வழங்கி உதவ வேண்டும் -என்றுள்ளது. (202-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர்
# திருமஞ்சம் மீதேறித் திருவுலா வரும்
# திருவிழாச் சிறப்பு மலர்



## நல்லாசிச்செய்தி

கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வில் எழுந்தருளி அருளாட்சி புரியும் ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவப் பெருமானுக்கு மஞ்சம் ஊர்தி அமைக்கப்பட்டுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இப்புண்ணிய கருமத்தை செய்யும் அனைவருக்கும், திரு.திருமதி சோதிலிங்கம் அவர்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும், பாண்டியன்தாழ்வு சைவப் பொதுமக்களுக்கும் இறைவன் அருள் கிடைத்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ இறை அருள் கிடைக்குமாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்,
*நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*

## ஆசியுரை

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பாண்டியன் தாழ்வுப் பதியிலே வீற்றிருந்து அருள்பாலித்து வரும் நரசிம்மஞான வைரவர் சக்திமிக்க தெய்வமாக விளங்கி வருகின்றார். சிறப்புமிக்க இவ்வாலயத்திற்கு ஓர் அன்பரின் நிதியுதவி கொண்டு ஒரு சிறப்புமிக்க மஞ்சம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்று தைப்பூசத் திருநாளில் நடைபெறும் இம்மஞ்ச வெள்ளோட்டம் சிறப்புற ஞான வைரவப் பெருமான் துணை நிற்பாராக.

*சிவாகமஞான பாஸ்கரன்*
சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,
*அதிபர், காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம்.*

## வாழ்த்துரை

பாண்டியன்தாழ்வு யாழப்பாண நகரின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ் பெற்ற குடியிருப்பாகும். இங்கு குடி கொண்டுள்ள நரசிங்க ஞான வைரவர் பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளி, ஈச்சமோட்டை வாழ் இந்து மக்களின் காவல் தெய்வமாவார். இவ்வாலயம் சிறப்பாகப் பேணப்பட்டு, பூசைகள், திருவிழாக்கள் ஒழுங்காக இடம்பெற்று வருவதுடன், ஞான வைரருக்குப் புதிதாகச் சித்திர மஞ்சம் அமையப்பெற்று இதன் வெள்ளோட்டம் இன்று இடம் பெறவுள்ளமை ஆலய அடியார்களுக்குப் பெரும் மன நிறைவைக் கொடுத்துள்ளது. இவ்வாலயச் சிறப்பு இப்பகுதி மக்களின் பொது வாழ்வையும், அறவாழ்வையும் முன்னெடுக்க வழி வகுத்துள்ளது.

இம்மஞ்ச வெள்ளோட்டம் சிறப்புடன் நடந்தேற எல்லாம் வல்ல ஞான வைரவர் அருள் புரிய பிரார்த்திக்கின்றேன். ஞானவைரவர் அருள் எல்லோருக்கும் கிட்டட்டும்.

*ஒப்புரவாளர், பேராசிரியர்*
பொ.பாலசுந்தரம்பிள்ளை.

## வாழ்த்துரை

''வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' என்ற அருள்வாக்குக்கு அமைவாக மானிடப் பிறவி எடுத்த நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். அவற்றுள் தலையாயது இறைபணி நிற்றலாகும்.


மிகவும் கஷ்டமான ஒரு காலகட்டத்தில் எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை மறக்காமல் இருக்கும் பொருட்டு இத்தெய்வீகப் பணியை மேற்கொண்ட அத்தனை பெருமக்களுக்கும் என் வாழ்த்தையும் ஆசியையும் கூறி அமைகின்றேன்.


கலாநிதி மா.வேதநாதன்
*தலைவர், இந்து நாகரிகத்துறை,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## வாழ்த்துச் செய்தி

எங்கள் கிராமத்தில் தைப்பூசத்திருநாளில் நடைபெறும் பெருவிழா பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவப் பெருமானின் திருமஞ்ச வெள்ளோட்ட உலாக் காணும் பெரும் பேறு பெறும் மெய்யடியார்களுடன் நாமும் இணைகின்றோம். கருமத்தில் நாயகனாம் தீமைகளைக் கருவறுக்கும் காவலனாம் எம்பெருமான் இம்மண்ணில் எம்மவரின் அல்லல் போக்கி பெருமைகளையும், வெற்றிகளையும் தந்தருள வேண்டும் என இறைஞ்சுகின்றோம். இத்திருப்பணியைத் தங்கள் கடமையாய் சிரமேற்கொண்டு அரும் பணியாற்றிய மெய்யடியார்கள் அனைவரையும் வாழ்த்தி அருள்வேண்டி அமைகின்றேன்.

வே.யுகபாலசிங்கம்
*தொகுப்பாசிரியர்,*
*திருமஞ்ச உலா விழாச் சிறப்பு மலர்.*





## ஆசியுரை

வைரவப் பெருமானுடைய வழிபாடு கந்த புராணம் போன்ற பழமை வாய்ந்த புராண இலக்கியங்களில் இடம்பெற்ற சிறப்புக்குரியது. யாழ். நகரை அண்மிய கொழும்புத்துறை வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ நரசிம்ம ஞான வைரவர் ஆலயத்தில் தைப்பூசத் தினத்தில் திருமஞ்ச வெள்ளோட்ட விழா ஒன்று நடைபெறவுள்ளது. இப்பணியில் பங்குகொண்ட அனைவருக்கும் வைரவப் பெருமானுடைய திருவருள் கடாட்சம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

*துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி,*
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

## ஆசியுரை

பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் ஆலயத்திற்கு புதிய மஞ்சரதம் உருவாக்கப்பட்ட செய்தி அறிந்து மிகுந்த ஆனந்தமடைகின்றேன். மெய்யடியார் ஒருவரின் நன்முயற்சியால் உருவாக்கப்பட்ட திருமஞ்சத்தில் வெள்ளோட்ட ஊர்தி பவனி வந்து எம் முண்ணை ஆற்றுப்படுத்தவேண்டும் எனப் பிரார்த்தித்து திருப்பணியில் மிகுந்த ஆர்வம் செலுத்திய பரிபாலன சபையினதுக்கும் சிற்பக்கலைஞர்களுக்கும் அடியவர்களுக்கும் வணக்கத்தினையும் வாழ்த்தினையும் நல்லாசிகளையும் கூறி அமைகின்றேன்.

''யாவர்க்குமாம் இன்னுரைதானே''
*செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.*

## ஆசிச்செய்தி

கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தானம் தைப்பூச தினத்தன்று மஞ்சத்தில் வைரவப் பெருமான் வீதிவலம் வரும் வெள்ளோட்ட விழா நிகழ்வது ஆண்டவன் அருள்நாடும் அனைவராலும் வரவேற்கப்படுவதாகும்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு, அருள்மிகு ஞானவைரவப் பெருமானின் வீதியுலா அருள் ஞானத்தை அகிலமெங்கும் நிலைபெறச் செய்வதோடு ஆணவமலும் அறவே அழிந்து எங்கும் அருள் மழை பொழிந்து அன்பின் அமைதி நிலவ வேண்டும் என வைரவப் பெருமானிடம் இறையருள் வேண்டி இறைஞ்சுகிறேன்.

ஆண்டவன் சேவையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு ஆன்மீக ஆரோக்கியத்தை மேம்படுத்தும் அடியார்கள் யாவரும் சகல சௌபாக்கியங்களையும் பெற்றுப் பல்லாண்டு வாழ என்றும் என் நல்லாசிகள் உரித்தாகட்டும்.

க.கணேஷ்.
*அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், யாழ்.மாவட்டம்.*


## உபயகாரரின் அன்பு அழைப்பு

எம்பெருமான் பாண்டியன் தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவப் பெருமான் தைப்பூசத் திருநாளில் திருமஞ்ச வெள்ளோட்ட உலாவரும் பேறு எமக்கு கிடைத்துள்ளது. மெய்யடியார்கள் அனைவரையும் இதில் பங்குகொண்டு இறையருள் பெற்று மீளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

எம் கடன் பணிசெய்து வாழ்வதே

*உபயகாரர்*
திரு.திருமதி கந்தையா சோதிலிங்கம்
குடும்பத்தினர்.

ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகம் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன.22

கைதடி ஸ்ரீமகாவிஷ்ணு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக க. சீனிவாசகமும், செயலாளராக க. துரைநாதனும் பொருளாளராக க.ஸ்ரீதரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனா.

இந் நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தில் கடற்றொழில் பரிசோதகர், கூட்டுறவு கணக்காய்வு உத்தியோகத்தர், கைதடி நாவற்குழி (ஜே/297) கிராம சேவையாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (202)

# ஈழத்தமிழர் கருத்துரிமை மாநாடு வெள்ளியன்று சென்னையில்

## விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் அறிவிப்பு

சென்னை, ஜன. 22

ஈழத்தமிழர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பது பற்றிய கருத்துரிமை மாநாடு எதிர்வரும் வெள்ளிக்கிழமை சென்னையில் நடைபெறவுள்ளது - என்று தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்திருக்கிறார்.

அரியாலூர் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்ட பின்னர் அரியாலூர் விருந்தினர் விடுதியில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''கிளிநொச்சியில் பச்சிளம் குழந்தைகளை இலங்கை இராணுவம் குண்டுவீசி கொல்ல முயன்ற கொடூரச் செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு பயிற்சியளிக்கக்கூடாது. போர் உபகரணங்களை வழங்கக்கூடாது.

விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக தமிழகத்தில் சில கட்சிகள் எங்களை விமர்சனம் செய்கின்றன. விடுதலைப் புலிகளை ஆதரிப்பது தமிழர் உரிமை. போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது, அனுதாபக் கூட்டங்களை நடத்துவது பற்றி எவரும் கருத்துக் கூறமுடியாது. இதற்காகவே எதிர்வரும் வெள்ளிக்கிழமை சென்னையில் கருத்துரிமை மாநாடு நடைபெறுகின்றது.

எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் ஆளும் கட்சியை குறைகூறுவது வழக்கமான ஒன்று. இந்த வகையில்தான் தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது என ஜெயலலிதா கூறியுள்ளார். ஆனால், தமிழகத்தில் அரசியல் தலைவர்களையும் தனிநபர்களையும் கூலிப்படையினரை வைத்து கொலை செய்வது கண்டிக்கத்தக்கது'' - என்றார். (சி)

## 'தேசத்தின் மகுடம்' கண்காட்சியில் பங்கேற்க வடக்கு மாகாண திணைக்களங்கள் தயாராகின்றன

யாழ்ப்பாணம்,ஜன.22

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகள் உட்பட சகல அரச திணைக்களங்களும் 'தேசத்தின் மகுடம்' (டயட்ட கிரில்ல) தேசிய கண்காட்சிக்குத் தயாராகின்றன.

அடுத்த மாதம் 4ஆம் திகதி முதல் 10ஆம் திகதிவரை பகல் - இரவு கண்காட்சியாக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது இடம்பெறவுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் எனப் பிரத்தியேகமான கூடம் அமைக்கப்படவுள்ளது.

கண்காட்சியில் பங்குபற்றும் வடக்கு மாகாணத்தின் சகல அரசாங்கத் திணைக்களங்களும் தமது கண்காட்சி பற்றிய திட்டங்களை ஜனவரி 24 ஆம் திகதிக்கு முன்னர் திருமலைக்குக் கொண்டு வரவேண்டும். பின்னர் முன்னாய்வு செய்யப்பட்டவை மட்டும் கண்காட்சிக்காக திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு வாகனங்கள் மூல் கொண்டு செல்லப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாணத்திலுள்ள சகல அரசாங்கத் திணைக்களங்களும் 'தேசத்தின் மகுடம்' கண்காட்சியில் பங்கெடுத்து கொள்வதற்கானதிட்டங்களை முன்னகர்த்தி வருகின்றன.

இதேவேளை -

நாடளாவிய ரீதியில் கண்காட்சியில் பங்குபற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவர். ஏனையவர்கள் ரூபா 20 கட்டணம் செலுத்தியே பங்குபற்றவேண்டும்.

துறைசார்ந்த ரீதியாகத் தெரிவுசெய்யப்படும் திட்டங்களுக்குப் பரிசில்களும், விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (202-95)



மொனறாகல தனமல்வில பகுதிக்குக் கடந்த ஞாயிற்றுக்கிழமை முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் சகிதம் விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனமல்வில தாக்குதலில் கொல்லப்பட்ட ஒவரின் வீட்டுக்குச் சென்று அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## கடற்றொழிலாளர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்

### முல்லைத்தீவிலும் வடமராட்சி கிழக்கிலும் சம்பவம்

கிளிநொச்சி,ஜன.22

முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் மீது நேற்று முன்தினம் கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனறு தெரிவிக்கப்படுகிறது.

இரு டோறாப் படகுகளில் காலை சுமார் 7 மணியளவில் வந்த கடற்படையினர், மீன்பிடித் தொழிலாளர்கள் மீது கண்மூடித்தனமாக பீரங்கித் தாக்குதலை நடத்தினர் எனறும் -

இத்தாக்குதலினால் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீன்பிடித் தொழிலாளர்கள், தமது வலைகளை வெட்டிவிட்டு உயர்தப்பி கரை சேர்ந்தனர் எனறும் கூறப்பட்டது.

கடற்படையினரின் இந்தத் தாக்குதலால் மீன்பிடித் தொழிலார்கள் தமது அன்றாட வாழ்வாதாரத் தொழில் உபகரணங்களை இழந்துள்ளனர்.

இதனிடையே யாழ். வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் கடந்த சனியன்று இரவு கடற்படையினரின் டோறா பீரங்கிப் படகுகள் தாக்குலினை நடத்தியுள்ளன. இத்தாக்குதலை கடற்படையினர் இரவு 7 மணி தொடக்கம் 7.15 மணிவரை நடத்தினர்.

கடற்படையினரின் டோறாப் பீரங்கிப் படகுகள் அதிகமாகக் காணப்பட்டதால் மீன்பிடித் தொழிலாளர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியாது வலைகளை வெட்டிவிட்டு திரும்பினர் என்று கரை திரும்பிய கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர். (சி)

## சாவகச்சேரி ப.தெ.கூ.சங்கத்திற்கு கடந்த வருடம் கள் விற்பனை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன.22

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் தவறணைகளில் கடந்த வருடம் கள் விற்பனை வீழ்ச்சியடைந்ததில் சங்கம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வருடம் போத்தலில் அடைக்கப்பட்ட 60 ஆயிரம் போத்தல் கள், விற்பனை செய்யப்படாமல் தேங்கியுள்ளதாகவும் இதனால் சங்கத்திற்கு பெருமளவு நிதி முடங்கியுள்ளதாகவும் சங்கப் பொதுமுகாமையாளர் ந.ஞானசேகரம் தெரிவித்தார். (202-207)

## 2008இல் உங்களது பலன்கள்...

### மீனம்



இந்த ஆண்டில் உங்களின் ராசியாதிபதி, பஞ்சமாதிபதி மற்றும் பாக்கியாதிபதி ஆகிய மூன்று திரிகோணாதிபதிகளும் ஒருவருக்கொருவர் கேந்திர ஸ்தானங்களில் இருந்து குருமங்களயோகம், சந்திர மங்கள யோகம் மற்றும் கஜகேசரி பெற்றிருப்பது சிறப்பு.

இதனால் உங்களிடம் தத்துவ ஞானம் பெருகும். ஆத்ம விசாரணை உங்களை உயர்த்தும். பெரியோர் மற்றும் உயர்ந்தவர்களின் ஆசிகளைப் பெற்று புனிதமடைவீர்கள்.

அதேசமயம் சத்ரு ஸ்தானத்தில் பலம் பெற்ற கிரகங்களால் உங்கள் செயல்கள் சில சமயம் கைமீறிச் சென்று, உங்கள்திட்டங்களைத் தவறாக்கிவிடும். அத்தகைய தருணங்களில் 'வருவது முற்றும் நன்மைக்கே' என்று எடுத்துக் கொண்டு கருமமாற்றிவர வாழ்க்கை சுலபமாகும்.

ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு லாபஸ்தானத்திற்கு பெயர்ச்சியாகும் ராகு பகவான் உங்கள் ஆற்றலைக் கூட்டித் தொழிலில் முன்னேற வழிவகுப்பார்.

இந்த ஆண்டு முழுவதும் உங்கள் ராசிதான் சுயபலம் பெற்று காணப்படுவதால் உங்கள் உடல் ஆரோக்கியம் பலப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். உங்களின் பேச்சை கர்வப் பேச்சு என்று பிறர் தவறாகப் புரிந்துகொள்ள வாய்ப்புள்ளதால், கவனத்துடன் வார்த்தைகளைப் பிரயோகிக்கவும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலையில் பளு இருந்தாலும் திறம்பட அதைச் சமாளிக்கும் ஆற்றலும் உண்டாகும். உங்களுக்கு சக ஊழியர்களும் அவசியமான நேரத்தில் உதவுவார்கள். கடந்த சில காலங்களாகத் தொடர்ந்து வரும் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, புதிய மாற்றத்தைக் காண்பீர்கள்.

வியாபாரிகள் மனதிற்குத் திருப்தியாக வியாபாரத்தை நடத்துவார்கள். மறைமுக எதிரிகளின் தொல்லைகள் குறையும். வாடிக்கையாளர்களின் விருப்பங்களையும், குறிப்பிட்ட தேவைகளையும் எப்பாடுபட்டாவது பூர்த்திசெய்து விடுவீர்கள். அதே சமயம் லாபங்களைப் பிரித்துக் கொள்ளும் சதவிகிதத்தில் கூட்டாளிகள் உங்களுடன் சற்று மாறுபடுவார்கள். இதனால் கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்திருக்கவும்.

விவசாயிகளுக்கு இந்த ஆண்டு கையிருப்புப் பொருள்கள் மீது அக்கறை அதிகரிக்கும். அதேபோல் நிலத்தின்மீதும் போதியகவனம் செலுத்துவீர்கள். நீர் வரத்து அதிகமாக இருப்பதால் பயிர் உற்பத்தி நன்றாகவே இருக்கும்.

கலைத்துறையினருக்கு வருமானம் குறைந்தாலும், தொழிலில் தொய்வு வராது. புதிய ஒப்பந்தங்களைப் பெறுவதில் சிறிய சிக்கல்கள் உண்டாகலாம். இருப்பினும் சக கலைஞர்கள் நட்புடன் பழகுவதால், அவர்களின் மூலம் உங்களின்தொழிலில் முன்னேற்றங்களைக் காண்பீர்கள்.

பெண்மணிகளுக்குக் கணவருடனான உறவு சீர்படும். குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பீர்கள். பிள்ளைகளைப் பற்றிய எதிர்கால யோசனைகள் மனதில் தோன்றும். உற்றார், உறவினர்களிடமிருந்து உங்களுக்கு நல்ல செய்தி வரும். சுப விரயங்கள் ஏற்படும். ஆடை, ஆபரணங்களையும், வீட்டு உபயோகப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். மற்றபடி தெய்வ பலத்தைப் பெருக்கிக் கொண்டால், பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

மாணவமணிகளின் கனவுகள் பலிக்கும். உங்களின் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். படிப்பில் அதிக மதிப்பெண்களைப் பெறுவதற்கான வாய்ப்புகளை உண்டாக்கும் ஆசிரியர்களின் பாராட்டும், ஆதரவும் தாராளமாக உங்களுக்குக் கிடைக்கும். ✱

## ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் ஆங்கில மொழிமூலக் கற்பித்தலுக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.22

இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் இருந்து ஜி.சீ.ஈ. உயர்தரப் பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படவுள்ளன.

கல்வி அமைச்சின் ஆங்கில மொழிமூல பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பிரியதா நாணயக்கார இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்படும் பாடசாலைகள் அனைத்திலும் ஆங்கிலமொழிமூலக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக உயிரியல், விஞ்ஞானம், இரசாயனவியல், பௌதிகவிஞ்ஞானம், விவசாயம், இணைந்த கணிதம், கணக்கியல், வர்த்தகம், பொருளியல், புவியியல், அரசியல் ஆகிய பாடங்களே ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படவுள்ளன.

இப்பாடங்களைக் கற்பிப்பதற்கு விருப்பமுள்ள ஆசிரியர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்திசெய்து அனுப்பவேண்டும். விண்ணப்பங்களை 55 வயதிற்கு மேற்படாதவராக இருக்கவேண்டும்.

விண்ணப்பங்களை 'திருமதி பிரியதா நாணயக்கார, பிரதிக் கல்விப்பணிப்பாளர் (ஆங்கிலமொழி), ஆங்கில மற்றும் வெளிநாட்டு மொழிக்கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்திரமுல்ல' எனும் முகவரிக்கு உடன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-95)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

வலி.தென் மேற்கு, ஜன.22

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்ல மெய் வல்லுநர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் கலந்து கொள்வார்.

சிறப்புவிருந்தினராகயாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட பயிற்றுநரும், மாவட்ட வலைப்பந்தாட்ட கழக தலைவருமான திருமதி ஏ. எப். ரூபசிங்கம் கலந்துகொள்வார். (202-135)

## சுபீட்ச வாழ்வுக்கு வழி திறக்கும் தைப்பூசத் திருநாள்

இன்று தைப்பூச நன்னாள். இது கலியுக வரதனாகிய கந்தப் பெருமானுக்குரிய விசேடமான புனித நாளாகும். இன்றைய தைப்பூச நன்னாளில் விரதமிருந்து முருகனை வழிபட்டால் சந்ததி விருத்தியும் சௌபாக்கியமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

'தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்' என்று ஞானசம்பந்தர் தமது தேவாரத் திருப்பதிகத்தில் குறிப்பிடுவதிலிருந்து இதன் பெருமையும் புனிதமும் மகிமையும் புலப்படுகிறது. இலங்கை யிலும் இந்தியாவிலும் முருகன் குடியிருக்கும் கோயில்களில் இந்தத் தைப்பூசம் மிக விசேடமாகக் கொண்டாடப்படுகிறது. ஆறுபடை வீடுகளிலும் கோலாகலமான விழாக்கள் நிகழும்-புண்ணிய நாள் இன்றைய தைப்பூசம்.

இந்தத் தைப்பூச நாளில் குழந்தைகளுக்கு ஏடுதுவக்குதல் எனப்படும் வித்தியாரம்பமும் காது குத்துதல் எனப்படும் கர்ணவேதனமும் நிகழ்வது தொன்றுதொட்டு நிலவிவரும் ஒரு வழக்கமாகும்.

எனவே தைப்பூச நன்னாளில் தமிழ்க் கடவுள் முருகனுக்கு வழிபாடியற்றி எமது நாட்டில் அமைதியும் சமாதானமும் சந்தோஷமும் நிலவ வேண்டுமென்று சிந்தித்து வந்தித்துச் சேவித்து நிற்போமாக.

- இராசையா ஸ்ரீதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலிகள்




**அந்தோனி பர்ணாந்து செபமாலைமுத்து**

(மத்தியஸ்தர்- உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் யாழ்.மாவட்டம்)

*20.01.2008 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

விளையாட்டுத்துறை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யா/முத்துத்தம்பி ம.வி. திருநெல்வேலி.**

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்

**A.F.செபமாலைமுத்து**

(பாதுகாப்பு நலன்புரிச்சங்க முன்னைநாள் செயலாளர்)

*அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் கொள்வதுடன் அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்,
**யாழ்.பல்கலைக்கழகம்.**
(70382)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 24.12.2007 அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

**திருமதி புவனேஸ்வரி கந்தவனம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.01.2008) புதன்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பூனியனடி,
உடுப்பிட்டி. (சி/551161) **குடும்பத்தினர்.**

## வைரஸ் நோய் விழிப்புணர்வு மாநாடு ஜெனிவாவில்

யாழ்ப்பாணம், ஜன.22

தற்போது பல நாடுகளில் பரவி வரும் வைரஸ் தொற்றுநோய் தொடர்பான உலக சுகாதார ஸ்தாபனத்தின் உயர்மட்ட மாநாடு ஜெனிவாவில் இடம்பெற்றது.

இதில் இலங்கையின் சார்பாக சுகாதார நலன்நோம்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கலந்துகொண்டு கருத்துரையாற்றினார்.

இம்மாநாட்டில் மெக்சிக்கோ, அமெரிக்கா, ஜப்பான், நியூசிலாந்து மற்றும் இலங்கையின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (202-95)

## தவறிவிட்டது

க.தங்கராசா (IC No: 672021944V) தோல்புரம் மேற்கு, சுழிபுரம் எனும் விலாசமுடைய சாரதி அனுமதிப்பத்திரம் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது 0602217324 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (70386)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஊழியரும்
நண்பனுமான
**வேலாயுதபிள்ளை செல்வராசா** *(ரவி)*
அவர்களின்
பாசமிகு மாமனார்

**தசாவதானம் ஞானசேகரம்**

*19.01.2008 சனிக்கிழமை இயற்கையெய்தினார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

டச்சு வீதி, ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பக
சாவகச்சேரி. உரிமையாளரும் ஊழியர்களும். (70387)

## NEW MICRO COMPUTER SYSTEMS

COMPUTER EDUCATION

NEW BATCH START ON: 22/01/2008
26/01/2008, 03/02/2008

சங்கானையில்........!

- Dip. in MicroSoft Office
- Dip. in Computer Disk top Papilising
- Dip. in Computer Software Engineering
- Dip. in Computer Hardware Engineering
- Dip. in Video Editing
- Dip. in Computer Accounting
- Dip. in ternet & E-mall



O/L ICT
A/L GIT

**NEW MICRO COMPUTER SYSTEMS**
MAIN STREET, CHANKANAI.
☎:021-4590042

## TGT Beauty Centre

மணப்பெண் அலங்காரம் (Facial, Eyebrow, Threading, Waxing), Cake Icing போன்ற அழகு சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். தொ.பே. 0779067544

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஆதரவுடன் தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் அழகுக் கலை பயிற்சி (Cake Icing, Flower Making, Facial, Hair Style, Fabric Painting, Handicraft, Dress Making) புதிய வகுப்புகள் ஆரம்பம்.

இடம்: 258, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

## வடமராட்சி நெல்லியடியில்
## கஜமுகன் மெடிக்கல் சென்ரர்
## KAJAMUGAN MEDICAL CENTRE

**(22.01.2008 செவ்வாய்க்கிழமை முதல் வைத்திய சேவையில்)**

- தினமும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை M.B.B.S வைத்தியர் பார்வையிடுவார்.

மற்றும் எமது சேவைகள்

- வைத்திய நிபுணர்கள் சேவை
  - பொதுவைத்திய நிபுணர் (VP)
  - தோல்வைத்திய நிபுணர்
  - சத்திரசிகிச்சை நிபுணர் (VS)
  - மகப்பேற்று வைத்திய நிபுணர் (VOG)
- எக்ஸ்றே, ஈ.சீ.ஜீ சேவைகள்
- இரத்தம், சலம் பரிசோதித்தல்
- மருந்து கட்டுதல்

**பிள்ளையார் கோயிலடி,
ம.ம.வி.வீதி ,
நெல்லியடி, கரவெட்டி.**
(சி/551165)

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து
## கழிவுபொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| பொருள்கள் | கூறுவிலை |
|---|---|
| கழிவு சீனி | 376 கிலோகிராம் |
| கழிவு மா | 356 கிலோகிராம் |
| கழிவு அரிசி | 95 கிலோகிராம் |
| கடலை | 9 கிலோகிராம் |
| தேங்காய் பால்மா | 87 பைக்கெற் |
| அங்கர் 3+ | 69 பைக்கெற் |
| லக்ஸ்பிறே | 12 பைக்கெற் |
| நெஸ்பிறே | 1+ பைக்கெற் |
| அங்கர் 400கி | 158 பைக்கெற் |
| அங்கர் நொன்பற் | 4 பைக்கெற் |

மேற்படி கழிவு பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை விண்ணப்பங்கள் 28.01.2008 திகதிக்கு முன்னதாக,

**பொதுமுகாமையாளர்,**
*யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து,
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்*

என்னும் முகவரிக்கு *கழிவுபொருள்களுக்கான கூறுவிலை விண்ணப்பம்* என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

**பொதுமுகாமையாளர்,**
*யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ-து.*
(சி/551164) 21.01.2008

## மரண அறிவித்தல்
### வல்லிபுரம் நல்லையா



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், மெமோறியல் ஒழுங்கை மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நல்லையா நேற்றுமுன்தினம் (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் சிறிகணேஸ் (லண்டன்), சிறிதேவி, சிறிறங்கன் (கனடா), சிறிகாந்தன் ஆகியோரின் அன்புமிக்க தந்தையும் ரவீந்திரன், சுவர்ணா, யசிகலா ஆகியோரின் பாசமிக்க மாமனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் மூத்தமகனும் பன்னாலை காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரி, இராசலட்சுமி, சற்குணராசா (ஓமான்), காலஞ்சென்ற கணேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராசதுரை, சிவலிங்கம், சிவராசா, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மச்சானும் சற்குணதேவியின் ஒன்றுவிட்ட அண்ணாவும் R.M.நாகலிங்கம் (அகில இலங்கை சமாதான நீதவான்) அவர்களின் அன்புக்குரிய மருமகனும் மு.நல்லம்மா அவர்களின் பெறாமகனும் தக்சுமி, சயிரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.01.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மெமோறியல் லேன்,
மானிப்பாய் வடக்கு. (70381) **ஆ.ரவீந்திரன்** (மருமகன்).

## மாணவர் கௌரவம்

நவாலி.ஜன.22

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் பொங்கல் விழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் சிவகடாச்சத்தின் தாயாரின்நினைவாக ஜி.சீ.ஈ சாதாரண தரம் வரை பயின்று அதிக புள்ளிகளைப் பெற்று வேறு பாடசாலைகளில் உயர் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் தற்போது இங்கு சகல தரங்களிலும் திறமைச் சித்திகளைப் பெற்று வரும் மாணவர்களுக்கும் சப்பாத்துகள் உட்பட பாடசாலை உபகரணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சண்டிலிப்பாய் கல்விவலயப் பணிப்பாளர் [illegible] உட்பட பலர் கலந்து கொண்டனர். (100)

## மரண அறிவித்தல்
### அந்தோனி பர்ணாந்து செபமாலைமுத்து



(பாதுகாப்பு உத்தியோகத்தர் யாழ்.பல்கலைக்கழகம்)

ஊர்காவற்றுறை மேற்கை பிறப்பிடமாகவும், முதலாம் ஒழுங்கை, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி பர்ணாந்து செபமாலைமுத்து நேற்றுமுன்தினம் (20.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி பர்ணாந்து - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரட்ணம் மற்றும் றோசா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராவின் அன்புக் கணவரும் நியோறின், RSV.Sr. மெடோனா (திருச்சிலுவை கன்னியர் மடம்), ஜீசன் (யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யூட்குமாரின் (கொழும்பு) அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான மரியதாஸன், செபஸ்ரி யாம்பிள்ளை மற்றும் செல்லமேரி, சூசைமலர், இருதயதாசன், ஆசீர்வாதம், ராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனடாவில் வசிப்பவர்களான குலேந்திரன், தெய்வேந்திரன், றாஜினி, றூபி, சாந்தி, தவராஜன், குமார், பத்மினி (யாழ்.) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் இன்று (22.01.2008) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27/23, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.* (76383) *தகவல்:* **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப் திட்டத்தின் கீழ் யாழ்.குடாநாட்டில் 4 ஆயிரத்து 76 வீடுகள் பூர்த்தியாகியுள்ளன

யாழபபாணம,ஜன.22

வடக்கு, கிழக்கு வீடமைப்புப் புனர் நிர்மாணத் திட்டத்தின் கீழ் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்.மாவட்டத்தில் 6 ஆயிரத்து 335 வீடுகள் புனர்நிர்மாணம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அவற்றுள் 4 ஆயிரத்து 76 வீடுகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள் ளன.

யாழ்.செயலகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் இத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டில் மாதிரித் திட்டத்தின் கீழ் 125 வீடுகளும், 2005 ஆம் ஆண்டில் கட்டம் I இன் கீழ் ஆயிரத்து 633 வீடுகளும், 2006 ஆம் ஆண்டில் கட்டம் II இன் கீழ் 2 ஆயிரத்து 318 வீடுகளும் புனர்நிர்மாணம் செய்யப்பட் டுள்ளன.

2007 ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 259 வீடுகள் புனர்நிர்மாணம் செய்வதற்குத் திட்டமிட்டு தற்போது பணிகள் நடை பெற்று வருகின்றன.

இந்த 4 ஆண்டுகளிலும் சங்கானையில் 711 வீடுகளும், நெடுந்தீவில் 52 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் 259 வீடுகளும், காரைநகரில் 220 வீடுகளும -

கரவெட்டியில் 281 வீடுகளும், ஊர்காவற்றுறையில் 189 வீடுகளும், கோப்பாயில் ஆயிரத்து 289 வீடுகளும், நல்லூரில் 342 வீடுகளும், பருத்தித்துறையில் 162 வீடுகளும், சண்டிலிப்பாயில் 729 வீடுகளும், -

தெல்லிப்பழையில் 644 வீடுகளும் தென்மராட்சியில் 813 வீடுகளும், உடுவிலில் 442 வீடுகளும், வேலணையில 177வீடுகளும், மருதங்கேணியில் 2[illegible] வீடுகளும் புனர்நிர்மாணத்திற்கெனத தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (202)

## தரம் உயர்த்தும் பரீட்சை குறிப்பிட்ட திகதியில் நடைபெறவில்லை

நவாலி,ஜன.22

அர்சாங்க சேவையின் கனிஷ்ட ஊழி யர்களை அரச முகாமை உதவியாளர் சேவை களில் தரம் உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சை குறிப்பிட்ட திகதியில் நடத்தப் படவில்லை என விண்ணப்பதாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப் பரீட்சை கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெறும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டு 25.05.2007 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் பரீட் சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டி ருந்தன. பரீட்சைக் கட்டணமாக 250 ரூபா வும் அறவிடப்பட்டிருந்தன.

எனினும் ஆணையாளர் குறிப்பிட்ட திக தியில் இப் பரீட்சை நடத்தப்படவில்லை எனச்சுட்டிக்காட்டப்படுகின்றது.(202-218-135)

## 500 வருடங்கள் பழமை வாய்ந்த பாரிய மரம் வேருடன் சாய்ந்தது!

யாழ்ப்பாணம், ஜன.22

சாவகச்சேரி வடக்கு, மண்டுவில் கண் ணகை அம்பாள் ஆலய சுற்றாடலில் காணப் பட்ட 500 வருடங்கள் பழமை வாய்ந்த பாரிய மரம் அண்மையில் பெய்த மழையின் போது வேருடன் சாய்ந்தது.

சுமார் 50 அடி உயரமான இம் மரம் ஆல், அரசு, இத்தி ஆகியவை பின்னிப் பிணைந்த ஓர் அறபுத மரமாக இருந்தது.

இப்பாரிய மரம் சாய்ந்ததில் அருகில் இருந்த முருகன் ஆலயம் பலத்த சேத மடைநதது. (202-207)



## சைவ அறிவுப் பரீட்சையும் செயல்முறைப் போட்டியும்

யாழ்ப்பாணம்,ஜன.22

வண்ணை - சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத் திக் கழகம் பாடசாலை மாணவர்களுக் கிடையில் சைவசமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு நடத்திவரும் சைவ சமய அறிவுப்பரீட்சை மற்றும் செயன் முறைப் போட்டி ஆகியவை இம்முறையும் நடைபெறவுள்ளன.

சைவ சமய அறிவுப்பரீட்சை தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரையிலான மாண வர் மட்டத்திலும் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகள் வயது வேறுபாடின்றி சகலரும் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

சைவ சமய அறிவுப்பரீட்சை அடுத்த மாதம் 17 ஆம், 20 ஆம் திகதிகளிலும் செயன்முறைப் போட்டிகள் அடுத்த மாதம் 24 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள் ளது.

இப்பரீட்சைகளிலும் போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்க ளுக்குப் பரிசில்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

பரீட்சைகளிலும் போட்டிகளிலும் பங்கு பற்ற விரும்புபவர்கள் 'சைவ சமய அபிவி ருத்திக் கழக அறிவகம், இல 82, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்' என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கழகத்தின் செயலாளர் சு.சிறீகாந்தன் அறிவித்துள் ளார். (202)

## சங்கானை ஸ்தான பாடசாலைக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.22

சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசா லைககு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் 80 பாடசாலைப் பைகளும் கற்றல் உபகரணப் பொதிகளும் அன்பளிப்பாக வழங்கியுள் ளனர். (202-29)

## தென்மராட்சி வலயத்திற்கு புதிய நிர்வாக அலுவலர்

யாழ்ப்பாணம், ஜன.22

தென்மராட்சி வலயக் கல்வி அலுவல கத்திற்கு நிர்வாக அலுவலராகப் பொன். தர்மேந்திரா மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தீவக வலயக் கல்வி அலுவலகத் தில் நிதி உதவியாளராகக் கடமையாற்றிய வர்.

தென்மராட்சி வலயக் கல்வி அலு வலகத்தில் நிர்வாக அலுவலராகக் கட மையாற்றிய எஸ். பத்மநாதன் கடந்த வரு டம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கபபட்டது. (202-207)

## ஜனநாயகத்தை எமது சமூகத்தில் கட்டியெழுப்பும் பொறுப்பும் கடமையும் ஊடகவியலுக்கு உண்டு

### என்கிறார் முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணம்,ஜன.22



ஜனநாயகத்தை எமது சமூகத்தில் கட்டியெழுப்பும் பொறுப்பும் கடமை யும் ஊடகவியலுக்கு உண்டு. சர்வதேச அளவில் கூடிய வேலை வாய்ப்பும் வசதிகளும் கூட இந்த ஊடகத் துறை யில் காணப்படுகின் றன.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம் பிள்ளை குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தின் முன்னாள் இணைப்பாளர் அருட்திரு. ரூபன் மரியாம் பிள்ளையின் 8 ஆவது நூலான 'சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம்' நூலின் வெளி யீட்டு விழா யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றிய முன்னாள் துணைவேந்தர் மேலும் தெரிவித்ததாவது:

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மன் ஆகிய நாடுகள் விவசாயப் பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக இருக்கின்ற போதிலும் 2 வீதமானவர்கள் மட்டுமே விவசாய உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடு கின்றார்கள்.

மேலைத்தேயங்களில் இன்று உயர் கல்வி கற்கும் மாணவர்கள் கணிதம், உயி ரியல், தாவரவியல் என்னும் பாடங்களைத் தெரிவு செய்வதைத் தவிர்த்து உயர் கல்விக்கு ஊடகவியல் துறையையே முதன்மையாகத் தெரிவுசெய்கின்றார்கள்.

இதேவேளை இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து சென்றவர் களின் பிள்ளைகளே கணிதம், உயிரியல் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்து கற்று வருகின்றார்கள்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் மட் டுமே ஊடகத் துறைக்கான தனியான பீடம் காணப்படுகின்றது. இந்த வகையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலும் ஊடகவியலுக்குத் தனியான பீடம் ஒன்றை அமைத்துத் தமிழ் பகுதியில் பட்டதாரி களையும் டிப்ளோமாதாரிகளையும் உரு வாக்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக வள நிலையம் என்பது தற்காலிகமான ஒரு தீர்வே ஆகும். இதனை முழுமைப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் பல் கலைக்கழகம் முதல் ஊடகவியலாளர்கள் வரைக்கும் உண்டு என்றார். (202-86)

### ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும்

## கணனி மூலமான நிகழ்ச்சித் திட்டம் யாழ்.நூலகத்தில் மீண்டும் ஆரம்பம்

ஆங்கிலக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் யுஎஸ்எயிட் நிறுவனம் சுயமாகக் கணனி மூலம் ஆங்கிலம் கற்கும் Dyned English Programme என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்.பொதுசன நூலகத்தில் மீண் டும் செயற்படுத்துகின்றது.

இத்திட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுத் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந் தது. தற்போது இத்திட்டத்தில் புதிய அல குகள் புகுத்தப்பட்டு தனியானதொரு பகு தியில் செயற்படுத்தப்படுகின்றது.

முழுசெயல் திட்டமும் ஆயிரம் மணி நேரக்கற்கை அளவைக் கொண்டதாக அமைகின்றது. வெளிநாடு செல்ல விரும் புபவர்களுக்கு IELTS, TOFEL போன்ற பயிற்சி அலகுகளும் உள்ளன.

முழுமையாகக் கற்றுமுடிப்பவர்களுக்கு கற்கைநெறியை வடிவமைத்த Headway School of Language Pvt (Ltd) நிறுவனம் சான் றிதழ்களை வழங்கவுள்ளது.

மேலதிக விவரங்களை நூலகக் கண னிப் பிரிவுடனோ 021 222 6030என்ற தொ லைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (202)




## நவாலியில் திருட்டு

நவாலி, ஜன.22

நவாலியில் நள்ளிரவு வேளை கடை யொன்று உடைக்கப்பட்டு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப் பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு நவாலி பிரதான வீதியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான கடையின் பின்புறமாகவிருந்த கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் அங்கிருந்த மல்லி, மிளகாய், ரின் மீன், பால்மா வகைகள், சிகரெட் வகைகள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களையும் எடுத்துச் சென்றுள் ளனர். (202-207)




வடமராட்சியில் போருட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் கையளிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சுகாதார நிலையத்தை திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், தும்பளை கிழக்கு வீதியை நாடா வெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், போருட் நிறுவனத்தின் மனித நேய உதவிகள் இணைப்பாளர் பி.நடேந்திரன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் திறந்து வைக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின் முகப்புத் தோற்றத்தை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 க.பொ.த.உயர்தர
கலைப்பிரிவில்
3A உயர்சித்தி பெற்ற எமது மாணவி
செல்வி

**நடராசபிள்ளை புஸ்ப்பம்**

அவர்களை உளம் கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற செ.ஸ்ரீகாந்தன் (2AC), ம.பிருந்தா (A2B), த.சஞ்சீவன் (ABC), செ.செல்வரூபன் (ABC), கி.ஜெயலதா (3B), த.சுமித்தா (3B), க.கலைவாகீசன் (2BC), க.மயூரன் (2BC) ஆகிய மாணவச் செல்வங்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இயக்குநர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்
சிவசக்தி உயர்கல்வி நிறுவனம், கொடிகாமம். (70365)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**பரமநாயகம் மயூரன்**



மலர்வு
26 ✱ 12 ✱ 1980

உதிர்வு
09 ✱ 12 ✱ 2007

கடந்த 19.12.2007 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் பரமநாயகம் மயூரன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.01.2008) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எழுகோயிலடி,
ஏழாலை மத்தி, ஏழாலை.

குடும்பத்தினர்
மகன் (விஜேஷ்).

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தம்பிஐயா நாகம்மா**
(பரராசசிங்கம்)

தோற்றம்
10 ✱ 05 ✱ 1930

மறைவு
28 ✱ 01 ✱ 2002


ஆண்டுகள் ஆறு சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது!

இணுவில் மேற்கு,
இணுவில். (70369)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்
10 ★ 04 ★ 1942



ஆண்டவன் அடியில்
23 ★ 12 ★ 2007

**அமரர் கதிரன் கணபதி**

திங்கள் ஒன்று கழிந்தது எங்கள் செந்நீர் விழிகளில்
மங்கா ஒளிச் சுடர் விளக்கே! எங்கே சென்றீர் எமைவிட்டு?

எங்கள் குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.01.2008) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் காலை 6 மணியளவில் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி. (70269)

குடும்பத்தினர்

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

கரவெட்டி, ஜன.22

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக இராமாயண தொடர்சொற்பொழிவாற்றி வரும் பொன்.சாந்தன் ஆலய ஆச்சிரமத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கௌரவிக்கப்பட்டார்.

இந்தக் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேரசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் கலந்து கொண்டு 'சொற்பொழிவாளருக்கு 'தமிழ் ஞான வித்தகர் என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

(202- 70)

## பொதுவிரிவுரைத் தொடர் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஜன.22

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு இன்று நடத்தவிருந்த சுக வாழ்வு பொதுவிரிவுரைத் தொடர் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என அலகின் இணைப்பாளர் பேராசிரியர் கா.குகபாலன் தெரிவித்தார். (202)

## தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச. அங்கத்தவர்களின் வாக்காளர் இடாப்பு பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜன.22

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட் டுறவுச் சங்க அங்கத்தவர்களின் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுறுத்திய வாக்காளர் இடாப்பு அந்தந்தக் கிளைக் கடை களில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இடாப்புகளில் தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் சங்கத் தலைமை அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துமாறு சங்கப் பொது முகாமையாளர் சி. தேவகுமாரன் கேட்டுள்ளார். (202-207)

## மெய்வன்மைப் போட்டி

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் கலந்து கொள்வார்.

(202-135)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.22

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் தகதி பிற்பகல் 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது (202)

## விவாக சுபமுகூர்த்த அழைப்பு

ஓம் சிவசக்தி

நிகழும் ஸ்வஸ்திஸ்ரீ மங்களமிகு சர்வசித்து வருஷம் உத்தராயணம் கிருஷ்ணபக்ஷம் தைமாதத் 9ஆம் நாள் (23.01.2008) பிரதமை திதியும் பூச நட்ஷத்திரமும் புதன்கிழமையும் கூடிய சுபதினத்தில் காலை 9.51முதல் 11.22 மணி வரையுள்ள சித்தயோகமும் மீனலக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்

கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த
பிரம்மஸ்ரீ தி.சபாரத்தினக்குருக்கள்,
பலாலி புவனேஸ்வரி அம்மன்
ஆலயத்தைச் சேர்ந்த
பிரம்மஸ்ரீ க.சதாசிவஐயர்
ஆகியோரின் பௌத்திரியும்
எமது சிரேஷ்ட புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**ஷைலஜாவை**



இலுப்பைத்தாழ் முருகன் ஆலய ஆதீனகுரு
சிவப்பிரம்மஸ்ரீ சு.சிவானந்தக்குருக்கள்
இலங்கை இந்துமதகுரு பீடாதிபதி
சிவப்பிரம்மஸ்ரீ ஸ்கந்த
சாம்பசிவசிவாச்சாரியார்
ஆகியோரின் பௌத்திரனும்
எமது புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**விஜயானந்த சர்மாவுக்கு**

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணம் செய்ய நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் திருவருளும் பெரியோரின் ஆசியும் கைகூடியுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சமாவர்த்தனம்* : அன்று அதிகாலை 4மணி (மணமகன் இல்லம்)
*வதுவரக்கிரகப்பிரவேசம்* : அன்று பிற்பகல் 2 மணி

பிரம்மஸ்ரீ ச.சிவசர்மா தம்பதியினர்,
72/3, பணிக்கர் ஒழுங்கை,
பலாலி வீதி, திருநெல்வேலி.

சிவப்பிரம்மஸ்ரீ சிவாநித்தியானந்தக்குருக்கள்
தம்பதியினர்,
சிவானந்த பவனம் முருகமூர்த்தி வீதி,
சங்கானை

இருவீட்டார் அழைப்பு
*(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)*

(76265)

## நயினையில் தைப்பூசத் திருவிழா



மலர்ந்திருக்கும் புத்தாண்டில் தைபூசத் திருவிழா இன்று (22.01.2008) வெகு சிறப்பாக நயினை நாகபூஷணி அம்மன் கோயிலில் விசேட பூசை வழிபாடுகளுடன் நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்கள், வேதபாராயணம், திருமுறை ஓதல் ஆகியவற்றுடன் ஏடு தொடக்குதல், நேர்த்திக்கடன்கள் ஆகியவற்றை செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விசேட பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து திருமஞ்சத்தில் அம்பாள் வீதி உலாவரும் அலங்காரக் காட்சியும் இடம் பெறும். விசேட மங்கள வாத்தியம் மற்றும் அடியார்களுக்காக அன்னதான ஒழுங்குகளையும் அன்ன தான சபையினர் நிறைவேற்றியுள்ளனர் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

கௌரவ செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(70376)

## 5 ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்

அமரர்
**தம்பு சிவபாக்கியன்**



திதி: பூரணை 22.01.2008

மண்ணில்: 12.01.1922
மனதில்: 18.01.2003

பாசமுடன் எம்மைப் பக்குவமாய் வளர்த்து
சீரிய கலைகள் நாம் பயில வழிகாட்டி
கல்வியோடு கண்ணியமும் கற்றுக் கொடுத்த
எம் தந்தையே!
ஐயா! எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்...
எந்நாளும் உங்கள் ஆத்ம சாந்திக்காய்
வேண்டுகிறோம்.

198, செம்.பெனடிக் றோட்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம். (70269)

- குடும்பத்தினர்.

## குடாநாட்டுப் பாடசாலைகள் சிலவற்றின் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.22

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர். அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வருமாறு-

**உடுவில் மகளிர் கல்லூரி**

*கலை:* கே. தயாளினி-3ஏ, எஸ். டால்றின் தாமரா- 3ஏ, வி. சாய்தன்யா-ஏ2பி, கே. துஷியந்தி-2ஏபி, எம்.ஓ. சவிதா-ஏபிசி, வி. விஜிதா-3பி, பி.ஹெமினி-3பி, பி.சிந்துஜா -ஏபிசி, இ.ஏ.தர்சினி-ஏ2சி, ஜி.கஸ்தூரி-ஏ2சி, கே.எல்.ஜீவமலா-ஏ2சி, கே.நிஷாந்தி -ஏ2பி, கே.துர்க்கா-2பிசி, ஆர்.டெனீஸ்ரா-ஏ2பி, எஸ்.ஆர்.சம்கி- 2பிசி, யோ. லதாணி-2பிசி, ஏ.மதிவதனி- ஏபிசி, ஈ.சலஜனா-2பிசி, ஜி.தர்சினி-2பிசி, ஜி.ஜதீபா-ஏ2பி, கே.சாந்தினி தேவி-2பிசி, எம்.டிலோஜினி-ஏ2பி, பி.கமலினி-ஏபிசி.

*வர்த்தகம்:* கே.தனுஜா-2ஏபி, கே.சோபனா- ஏ2பி, ரி. கலைமகள்-ஏபிசி, ரி. அனுசுயா- ஏபிசி, கே. கௌசிகா-ஏபிசி, எம். ஜெகதா- 3பி.

*கணிதம்:* பி. கல்பனா-3பி, எஸ். சுமல்யா- பிசிஎஸ்,

**பருத்தித்துறை வேலாயுதம் ம.வி.**

*கலை:* எஸ்.பிரசாத்-3ஏ, எஸ்.சிறீகரன்-2ஏபி, எஸ்.யதீபன்- 2ஏபி, என்.நிரோஜன்-2ஏபி, எஸ்.அஜந்தன்-ஏபிசி.

(202-226)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுமினி அசத்தல்; தென்னாபிரிக்கா வெற்றி

செஞ்சூரியன், ஜன.22

போல் டுமினி அபாரமாக ஆடி ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுகளால் வெற்றியைச் சுவீகரித்தது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் டெஸ்ட் தொடரில் பங்குபற்றியது. இதில் 2-1 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. தற்போது 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் இவ்விரு அணிகளும் விளையாடி வருகின்றன. தொடரின் முதலாவது போட்டி நேற்றுமுன்தினம் செஞ்சூரியனில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை தென்னாபிரிக்காவின் வேகங்கள் ஆரம்பத்திலிருந்தே அச்சுறுத்தின. முன்னணி வீரர்கள் எவரும் அதிக நேரம் களத்தில் நீடிக்கவில்லை. முக்கிய 6 விக்கெட்டுகளை 81 ஓட்டங்களைப் பெறுவதற்கிடையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இழந்துவிட்டது.

7ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த ராம்டின், டரன் சமி ஆகியோர் அணிக்கு நம்பிக்கையளித்தனர். இருவரும் தம்மிடையே 69 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் ராம்டின் 41 ஓட்டங்களுடன் (50 பந்துகள், 2 பவுண்டரிகள்) 'ரன் அவுட்' ஆனார். அபாரமாக ஆடிய டரன் சமி 3 சிக்ஸர்கள் மற்றும் ஒரு பவுண்டரியுடன் 51 பந்துகளில் 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 35.5 ஓவர்களில் 175 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் டேல் ஸ்ரைன், அன்ட்ரூ நெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும்,



ஷோன் பொலக், லாங்வெல்ற், மோர்கில் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இலகுவான இலக்கைக் கலைத்த தென்னாபிரிக்க அணி ஆரம்ப விக்கெட்டுகள் இரண்டையும் விரைவாக இழந்தது. ஆரம்ப வீரர்களான கிரேம் சிமித் ஒரு ஓட்டத்துடனும், டீ வில்லியர்ஸ் 2 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். தொடர்ந்து களம்புகுந்த ஜக் கலிஸ் 24 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ரவி ராம்போலின் பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

சிறப்பாக ஆடிய போல் டுமினி அணியின் வெற்றிக்கு நம்பிக்கையளித்தார். இவருக்கு சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கிய ஒன்ரொங் 23 ஓட்டங்களையும், மார்க் பௌச்சர் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 34ஆவது ஓவரின் முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 176 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவுசெய்தது. இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்த போல் டுமினி 88 பந்துகளில் 9 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 79 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணியின் வெற்றிக்குப் பெரிதும் பங்காற்றினார். ஆட்டநாயகன் விருதை இவரே வென்றெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'நம்பர் 1' அந்தஸ்து ஆட்டம் கண்டுள்ளது

## கங்குலி தெரிவிப்பு

மெல்போண், ஜன.22

உலகில் 'நம்பர் 1' அணி என்னும் ஆஸ்திரேலியாவின் அந்தஸ்து ஆட்டம் கண்டிருப்பதாக இந்திய வீரர் சௌரவ் கங்குலி கூறியிருக்கிறார்.

கிரிக்கெட் உலகில் 'நம்பர் 1' அணியாக விளங்கக்கூடிய தகுதி இந்தியாவுக்கு இருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.அது தொடர்பாக ஆஸ்திரேலிய நாளிதழுக்கு கங்குலி அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

''மெக்ராத் மற்றும் ஷேன் வோர்ன் போன்ற வீரர்கள் ஓய்வு பெற்ற பின்னர் ஆஸ்திரேலியா அணி பழைய பலத்தோடு இல்லை. இன்னமும் ஆஸ்திரேலியா அணிதான் உலகின் 'நம்பர் 1' அணியாக இருந்தாலும் அந்த அந்தஸ்து ஆட்டம் கண்டிருக்கிறது.

''உலகின் 'நம்பர் 1' அணியாக விளங்கக் கூடிய தகுதி இந்தியாவுக்கு இருக்கிறது. மற்றைய எந்த அணியையும் விட ஆஸ்திரேலியாவுக்கு இந்தியா சவால் விடும் வகையில் விளையாடி வருகிறது. சிட்னியில் இந்திய அணி வெற்றி பெற்றிருக்க வேண்டும். பேர்த் வெற்றி மகிழ்ச்சியைத் தருகிறது. இப்போது தொடரைச் சமன் செய்யும் வாய்ப்பு இருக்கிறது. ஆஸ்திரேலிய இளம் வீரர்களுக்கு போதிய அனுபவம் இல்லை.'' - இவ்வாறு அவர் கூறினார்.

# கும்ளே சிறந்த அணித்தலைவர்

## அலன் போடர் கருத்து

சிட்னி, ஜன.22

பேர்த் டெஸ்ட்டில் இந்திய அணி வெற்றி பெற்றது குறித்து ஆஸி. முன்னாள் வீரர் அலன் போடர் கருத்து வெளியிட்டுள்ளார்.



''பேர்த் டெஸ்ட்டில் வென்ற இந்திய அணிக்குஎனது வாழ்த்துக்கள். மிகச்சிறப்பாக ஆடிய இந்தியா, வெற்றிக்குத் தகுதியான அணிதான். ஒவ்வொரு வீரரும்சிறப்பாகவிளையாடினர்.ஓர் அணி வெற்றிபெற வேண்டுமென்றால், 11 வீரர்களும் தங்களது முழுத் திறமையையும் வெளிப்படுத்துவது அவசியம்.

''பதான் துடுப்பாட்டம், பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்டார். வருங்காலத்தில் இவர் சிறந்த சகலதுறை வீரராக உருவெடுக்கலாம். போட்டி ஆரம்பமாவதற்கு முன்னதாக ஆஸ்திரேலிய அணி எளிதில் வெல்லும் என அனைவரும் கணித்திருப்பர். ஆனால், முதல் இன்னிங்ஸில் இந்திய நட்சத்திர வீரர்கள் அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தி, வெற்றிக்கு வித்திட்டனர்.

''அணித்தலைவராக கும்ளே அணியை முன்னின்று வழிநடத்திச் சென்றார். அவர் ஒரு சிறந்த அணித்தலைவர் என்பதை நிரூபித்துள்ளார். இப் போட்டியில் வென்றதன் மூலம் இந்திய அணி தொடரைச் சமன் செய்வதற்கான வாய்ப்புகளை பிரகாசப்படுத்திக் கொண்டுள்ளது. அடிலெய்ட்டில் இந்திய அணி மீண்டும் வெல்ல முழுமையாகப் போராடும் என்பதால் ரசிகர்களுக்கு மீண்டும் ஒரு விறுவிறுப்பான மோதல் காத்திருக்கிறது.'' - என்றார் போடர்.

# தோல்வி வலிக்கிறது

## - ஸ்ருவேட் கிளார்க்

தொடர்ச்சியான 17ஆவது டெஸ்ட் வெற்றி பறிபோனது மிகுந்த வருத்தம் அளிப்பதாக ஆஸ்திரேலியாவின் ஸ்ருவேட் கிளார்க் தெரிவித்துள்ளார்.

பேர்த் டெஸ்ட் தோல்வி குறித்து ஸ்ருவேட் கிளார்க் கூறியவை வருமாறு:- ''பேர்த் தோல்வி மனதளவில் வலியைத் தருகிறது. நாங்கள் வெற்றிபெற்றிருந்தால் அருமையாக இருந்திருக்கும். எப்படிப் பார்த்தாலும் தோல்வி தோல்விதான். அடிலெய்ட் டெஸ்டில் பந்துவீச்சுப் பயிற்சியாளருடன் சில நுணுக்கங்களை கையாளஇருக்கிறோம். அடிலெய்ட் ஆடுகளம் பந்துவீச்சுக்கு நன்றாகக் கைகொடுக்கும். இந்திய 'வேகங்களும்' அசத்தலாம்.'' - இவ்வாறு ஸ்ருவேட் கிளார்க் கூறினார்.




# ஈராக்கிலுள்ள தீவிரவாதிகளுக்கு பயிற்சி, நிதி வழங்குகிறது ஈரான்

## அமெரிக்கா மீண்டும் குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜன.22

ஈராக்கிய தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்குவதைக் குறைத்துக் கொண்டுள்ள ஈரான் அங்கு அவ்வாறான பயிற்சியையும் நிதியுதவியையும் தொடர்ந்தும் வழங்குவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டை அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் கிரேக் சுமத் தெரிவித்தார்.

''ஈரானிலிருந்து ஈராக்கிற்குள் வந்துள்ள ஆயுதங்களின் அளவு பெருமளவிற்கு குறைந்துள்ளது எனக் கருதுகின்றோம். எனினும், பயிற்சியின் அளவோ அல்லது நிதியுதவியின் அளவோ குறையவில்லை.'' - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான், ஈராக்கியத் தீவிரவாதிகளுக்கு கனரக வாகனங்களைத் துளைக்கக்கூடிய அதி நவீன குண்டுகளை வழங்கி வருவதாக அமெரிக்கா கடந்த காலங்களில் குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனவரியின் முதல் இரு வாரப்பகுதியில் இவ்வகை ஆயுதங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டதாகவும் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலைமைக்கு என்ன காரணம் என்பது தெரியவில்லையென்றும் அவர் கூறினார்.

ஈராக் விவகாரத்தில் ஈரான் தொடர்ந்தும் எதிர்மறையான தாக்கத்தை விளைவிக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கக் கப்பல்களுடன் ஈரானியப் படகுகள் மோதின என வெளியான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து இரு நாட்டு உறவுகளும் பாதிப்படைந்துள்ள நிலையிலேயே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

இதேவேளை, இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையிலான அடுத்த கட்ட சந்திப்பிற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நடுவானில் விமானங்கள் மோதல்! அமெரிக்காவில் நால்வர் மரணம்!!

அமெரிக்காவில் இரண்டு சிறு விமானங்கள் நடுவானில் மோதிக்கொண்டு விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர். இறந்தவர்களில் 3 பேர் விமானத்தில் பயணம் செய்தவர்கள். மற்றொருவர் விமானங்கள் உடைந்து தரையில் விழுந்தபோது அதில் சிக்கி உயிரிழந்தார்.

அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரின் அருகே கோரோனா என்ற இடத்தில் சிறிய விமான நிலையம் ஒன்று உள்ளது. இந்த விமான நிலையத்தின் அருகே தனியாருக்குச் சொந்தமான இரண்டு சிறு விமானங்கள் நடுவானில் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இதைத் தொடர்ந்து விமானத்தின் உடைந்த பாகங்கள் விண்ணிலிருந்து மழை பொழிவது போல் கீழே விழுந்தன. அவை விமான நிலையத்தின் அருகில் இருந்து கார் விற்பனை மையம் ஒன்றின் மீது விழுந்தன.

விமானப் பாகங்கள் கார் ஒன்றின் மீது விழுந்ததில் அந்தக் கார் நொறுங்கியதுடன் அதில் இருந்த ஒருவர் கொல்லப்பட்டார். விமானத்தில் பயணம் செய்த 3 பேரும் உயிரிழந்தனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானங்கள் நடுவானில் மோதிக் கொண்ட பின்னர் ஒரு விமானம் வெடித்துச் சிதறி சிறுசிறு பாகங்களாகப் பிரிந்து விழுந்தன என்றும் மற்றொரு விமானம் அப்படியே தரையை நோக்கி வேகமாக வந்து விழுந்தது என்றும் இதனை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் குறித்துப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# சேர்பிய ஜனாதிபதித் தேர்தலில் கடும்போக்காளர் முன்னிலையில்



சேர்பியா, ஜன.22

சேர்பிய ஜனாதிபதித் தேர்தலின் முதல் சுற்றில் கடும்போக்கு தேசியவாதி டொமிஸ்லாவ் நிக்கொலிக் வெற்றி பெற்றுள்ளார். எனினும், இரண்டாவது சுற்றுத் தேர்தலை அவர் சந்திக்கவேண்டி நேரிடலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. நிக்கொலிக்கிற்கு 39 வீத வாக்குகளும் தற்போதைய ஜனாதிபதி டொறிஸ் டடிக்கிற்கு 35 வீதமும் கிடைத்துள்ளன.

பெப்ரவரியில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றில் நிச்சயம் வெற்றி பெறுவாரென தற்போதைய ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். சேர்பிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவதற்கு வேட்பாளரிற்கு 50 வீத வாக்குகள் கிடைப்பது அவசியம்.

கொசோவோவின் எதிர்காலம் தொடர்பான பதற்ற நிலை அதிகரித்துள்ள சூழ்நிலையிலேயே இந்தத் தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. கொசோவோவிற்கு சுதந்திரம் வழங்கப்படுவதை இருவேட்பாளர்களும் கடுமையாக எதிர்க்கின்றனர்.

# எட்மண்ட் ஹிலாரியின் உடல் நேற்று அடக்கம்

ஒக்லண்ட், ஜன. 22

எவரெஸ்ட் சிகரத்தில் முதன்முதலில் கால் பதித்துச் சாதனை படைத்த நியூஸிலாந்தைச் சேர்ந்த சேர் எட்மண்ட் ஹிலாரியின் உடல் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. முன்னதாக அவரது சொந்த ஊரில் ஆயிரக்கணக்கான மக்கள் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

1953ஆம் ஆண்டு முதன்முதலில் இமயமலையில் உள்ள எவரெஸ்ட் சிகரத்தில் கால் பதித்து சாதனை படைத்தவர் எட்மண்ட் ஹிலாரி. 88 வயதான அவர் கடந்த 11ஆம் திகதி மாரடைப்பால் காலமானார்.

அவரது உடல் ஆக்லாந்தில் உள்ள தேவாலயத்திற்கு நேற்று கொண்டு வரப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

எவரெஸ்ட்டில் ஏறி சாதனை படைத்த பின்னர் நேபாள மலைவாழ் மக்களுக்காக தனது வாழ்க்கையையே அர்ப்பணித்த ஹிலாரிக்கு நியூஸிலாந்தில் வசிக்கும் நூற்றுக்கணக்கான நேபாள மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

# கென்யாவில் பலர் வெட்டிக் கொலை!

தேர்தல் குளறுபடிகளால் தொடர்ச்சியாக வன்முறைகள் நிகழ்ந்துவரும் கென்யாவின் தலைநகர் நைரோபியில் நேற்றுமுன்தினம் பலர் கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்டனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



நைரோபியின் மதாரே குடிசைப் பகுதியில் கிக்கியு, லூவோ பழங்குடி இனத்தவர்களிடையே ஏற்பட்ட மோதலின்போதே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. சுமார் பத்துப் பேரின் உடல்கள் வரை வெட்டுக்காயங்களுடன் வீதிகளில் கிடக்கக் காணப்பட்டன என நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

அப்பகுதியிலிருந்து நள்ளிரவிற்குள் லூவோ இனத்தவர்களை வெளியேறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும் இதனாலேயே இரு இனங்களுக்கிடையேயும் மோதல் வலுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதலின் போது நபர் ஒருவரின் கையை துண்டித்த இளைஞர்குழு அதனை எடுத்துச் சென்றுள்ளது. இதேபோன்று மற்றுமொருவரின் இரு கைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் இவற்றைத் தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவ மனைகளில் வெட்டுக் காயங்களுடன் 13 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரன் படுகொலைச் சந்தேக நபரை அடையாளம் காணும் இரண்டாவது அணிவகுப்பு

கொழும்பு,ஜன. 22

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரன் படுகொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் நபரை அடையாளம் காணக்கூடிய சாட்சியாளர் இருப்பின் எதிர்வரும் 25 ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு ஆஜராகுமாறு கொழும்பு மேலதிக நீதிவான் இரவீந்திர பிரேமரத்ன நேற்று உத்தரவிட்டிருக்கிறார்.

சட்டமா அதிபர் திணைக்களம் முன்வைத்த கோரிக்கைக்கு அமையவே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இரண்டாவது தடவையாகவும் அடையாள அணிவகுப்பை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளதால் அனைத்து சாட்சியாளர்களையும், அன்றைய தினம் நீதிமன்றில் ஆஜராகுமாறு அரச தரப்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதன்போது, மகேஸ்வரனின் உறவினர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபரை அடையாளம் காண்பதற்கு சாட்சியாளர்கள் உள்ள போதிலும் அவர்களின் பாதுகாப்பு குறித்து நிலவுகின்ற சிக்கல் காரணமாக அடையாள அணி வகுப்பில் கலந்து கொண்டு சாட்சியமளிக்க அச்சம் தெரிவிக்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

அடையாள அணிவகுப்பில் கலந்துகொள்வோரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். (சி)

# கணணி நிறுவனத்தின் காட்சியகம் நெல்லியடியில் இன்று திறக்கப்படுகின்றது

யாழ்ப்பாணம்,ஜன.22

"பிசிபாக்" கணணி நிறுவனம் நெல்லியடியில் காட்சியகத்தை தைப்பூசத்தினமான இன்று முற்பகல் 11.05 மணிக்கு திறந்து வைக்கிறது.

இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் வி.தில்லைநாதன் காட்சியகத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

# கைதடி வடக்கில் ஞாயிறன்று மோதல்; இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டன

## புலிகளின் பொறுப்பாளர் அவர்களில் ஒருவர் என்கிறது படைத்தரப்பு

யாழ்ப்பாணம்,ஜன.22

கைதடிவடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது.

பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இருவரின் சடலங்களை கண்டுபிடித்தனர் என்று தெரிவிக்கப்பட் டது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நேற்று நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். அதனை அடுத்து நீதிவான் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டார்.

சடலங்களுடன். T-56 ரக துப்பாக்கிகள் -இரண்டும், பிஸ்டல் இரண்டும், மகஸின் மூன்றும் மீட்கப்பட்டதாக பொலிஸாரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கண்டுபிடிக்கப்பட்ட சடலங்களை அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைத்திருக்குமாறும்,ஊடகங்களில் செய்தி வெளியாகி ஐந்து நாள்களுக்குள் அவை அடையாளம் காணப்படாவிடின் அரச செலவில் அடக்கம் செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிவான் உத்தர விட்டார்.

இதேவேளை,கைதடிவடக்கில் ஞாயிறு மாலை இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் செங்கனும் மற்றொருவரும் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்தது. (அ-207)

# பாதை விலகி வீழ்ந்தது பஸ் பயணிகள் 54பேர் காயம்

கண்டி, ஜன.22

தெல்தெனியாப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பயணிகள் பஸ் ஒன்று 30 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 54 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை தெல்தெனியாவிலிருந்து கண்டிக்குச் சென்று கொண்டிருந்த பஸ்ஸே விபத்துக்கு உள்ளானது. படுகாயமடைந்தவர்கள் கண்டி மற்றும் தெல்தெனியா வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தெல்தெனியாப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை தனியார் பஸ் ஒன்று பாதையை விட்டு விலகி 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 14 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## யாழ். பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞனைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப இளைஞன் பல்கலைக்கழக மாணவனோ ஊழியரோ அல்லர் என பல்கலைக்கழக தரப்பில் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இவர் படைத்தரப்பைச் சேர்ந்தவர் அல்லர் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப இளைஞனை அடையாளம் காணக்கூடிய ஆவணங்கள் எவையும் அவர் வசம் இருக்கவில்லை என்று விசாரணையில் கூறப்பட்டது.

19 வயது மதிக்கத்தக்க 5 அடி 8 அங்குல உயரமுள்ள இச்சடலத்தை யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கும்படியும் சடலத்தை இனங்காண பத்திரிகையில் தகவல் வெளியிடும்படியும் நீதிபதி யாழ். பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (அ-1-68)

## மொனறாகலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

மொனறாகலைப் பகுதியிலுள்ள குமாரவத்தை தோட்டத்திற்கும், மரகலை தோட்டத்திற்கும் எல்லைப் புறமாக அமைந்துள்ள கற்குகை ஒன்றிற்குள் இருந்தே இவை மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளைமோர் குண்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் 21 டெட்டனேட்டர்கள், 12 கம்பிகள், மைக்ரோ ரக கைத்துப்பாக்கி, 9 மில்லிமீற்றர் ரக சன்னங்கள் 46, ரி-56 ரக துப்பாக்கிக்குரிய சன்னங்கள் 146, பட்டரிகள், தூர இடங்களை அவதானிக்கக்கூடிய கருவிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தேடுதல் நடவடிக்கையின்போது மரகல, சிரிகல, பாலாடுவ, ஜிலோன் ஆகிய தோட்டங்கள் உட்படுத்தப்பட்டன. ஆனால், எவரும் இங்கிருந்து கைது செய்யப்படவில்லை எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

## கொழும்பு வெள்ள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொ.இராதாகிருஷ்ணன் வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு இவர்களின் கைது குறித்த விவரங்களைக் கோரியிருந்தார்.

அதன்போது இவர்களில் ஐவரை விடுதலை செய்வதற்குரிய புலனாய்வுத் தகவல்கள் தமக்குக் கிடைத்துள்ளன என்றும், அவர்களை விடுவிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். கைதானவர்களில் ஒருவர் சந்தேகத்துக்குரியவராக உள்ளார் என்றும், அவர் பற்றிய புலனாய்வுத் தகவல்கள் உரிய முறையில் கிடைக்கப் பெற்றதன் பின்னரே அவரது விடுதலை குறித்து முடிவு செய்யப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டதாகப் பிரதி அமைச்சர் கூறினார். (அ-சி)

## இடைக்காலத் தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல் செய்யமுடியாமல் விட்டால் அது குறித்து உயர் நீதிமன்றத்திற்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ தெரியப்படுத்துமாறும் நீதியரசர் உத்தரவிட்டார். தேர்தல்களில் மோசடிகள் இடம் பெறுமாயின் அது குறித்து நீதிமன்றுக்கு அறியத்தரவேண்டும். இது குறித்து மனுத்தாக்கல் செய்தால் நீதிமன்றம் விசாரிக்கத் தயாராக உள்ளது என்றார்.

இதற்கு அமைய குறிப்பிட்ட மனுக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீளப்பெற்றுக் கொண்டது. (க - 09)

## இடைக்கால அறிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டியுள்ளது. அதற்கு கால அவகாசம் தேவை என சிறுபான்மைக் கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இதன் காரணமாக அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுக்க முடியாத நிலையில் கூட்டம் கலைந்தது.

தெரிவுக்குழு இன்று மீண்டும் கூடி ஆராய்ந்த பின்னரே அறிக்கை இறுதியாக்கப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என நம்பகரமாக அறியவந்தது. (அ-1)

## அரசு அனுசரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- எப்போது விரும்பிக் கேட்டாலும் அதனைச் செய்வதற்கு - சமாதான முயற்சிகளை முன்னெடுக்க - நாம தயாராக உள்ளோம்.

ஆனால் இப்போதைக்கு எமது பணி தேவைப்படவில்லை என்றே நான் கருதுகிறேன். இது வரை எவ்வித அழைப்பும் கிடைக்கவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அந்நாட்டு இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை வழியில் மீண்டும் தீர்வு காண முயற்சி செய்யவேண்டும் என்று அரசாங்கம் விரும்புமாயின் அதற்கு எமது பூரண ஆதரவு உண்டு.

2000ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப எமது வாக்குறுதியை வழங்கினோம். மீண்டும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பைத் தொடர்ந்து எமது பணியைச் செய்தோம்.

பேச்சுவார்த்தைகளை இயன்றளவு விரைவில் மீண்டும் தொடங்கக்கூடிய புறநிலையைத் தொடர்ந்து பேணுவதனையே நாம் இப்போது மேற்கொள்ள விரும்புகிறோம். அதனைச் செய்து கொண்டிருக்கிறோம் - என்றார்.

தமது நாட்டில் அமைதியை உருவாக்கும் நலல சந்தர்ப்பத்தை இலங்கை மக்கள் இழந்து விட்டார்கள். அதனால் அவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளார்கள் என்பது கவலைக்குரியது. அந்த நிலைமை குறித்து நாம் வருந்துகிறோம். போர் ஓய்ந்த பின்னர் மீளக் குடியேறியவர்களுக்கு மீண்டும் இந்த வருடத்தில் முந்திய கதி ஏற்படலாம் என்று நாம் கவலை கொண்டுள்ளோம் - என்றும் சமாதானத் தூதுவர் பௌவர் தமது நீண்ட பேட்டியில் தெரிவித்தார்.

## யார் எதிர்த்தாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைய அரசுகளால் வைக்கப்பட்ட யோசனைகளைவிட வித்தியாசமானது. இது விடுதலைப் புலிகளுக்காக முன்வைக்கப்படும் யோசனைகள் அல்ல. வடக்கு, கிழக்கு மக்களுக்காகவே முன் வைக்கப்படுகிறது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

### புலிகளை ஒதுக்கிவிட்டே தீர்வுயோசனை

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு உட்பட்டதாகவே அரசின் யோசனைகள் உள்ளன. விடுதலைப் புலிகளை ஒதுக்கிவிட்டு வடக்கு, கிழக்கில் உள்ள மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய அரசியல் கட்சிகளை உள்வாங்கியே இந்த யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. புலிகளை ஒதுக்கிவிட்டு தயாரித்ததால் இந்தயோசனைகள் வெற்றி அளிக்கும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கமைவாக மாகாண சபை முறையையே தீர்வு யோசனையாகச் சமர்ப்பிக்க சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது. தற்பொழுது ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளால் இந்த வருடத்துடன் யுத்தம் முடிவுக்கு வந்து நிலையான சமாதானம் ஏற்படும் வாய்ப்பு தென்படுகிறது.

இந்தத் தீர்வு யோசனைகள் மூலம் புலிகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். வடக்கு - கிழக்கில் உள்ள மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் தமது மக்களின் குறைகளைத் தீர்க்க இத்தீர்வு யோசனைகள் முற்றாக வழியமைத்துள்ளன.

### புலிகளை ஓரங்கட்டியதால் பாதிப்பு இல்லை

தீர்வு யோசனைகள் மூலம் புலிகள் ஓரங்கட்டப்பட்டிருப்பதால் இதற்குஎந்தப் பாதிப்பும் ஏற்படாது. புலிகள் ஒருபோதும் எந்தத் தீர்வுத்திட்டத்திற்கும் உடன்பட மாட்டார்கள். அவர்கள் யுத்தத்தையே விரும்புகின்றனர்.

அவர்களின் வழியில் சென்று அவர்களின் பயங்கரவாதத்தை ஒழிப்பதுதான் ஒரேவழி. அந்த வகையில் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான யுத்தம் தொடரும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகி அமைதிப் பேச்சுக்கு வருமாறு புலிகளைப் பல தடவைகள் அழைத்தும் அவர்கள் அவ்வழைப்பை ஏற்காமல் அரசின் மீது யுத்தத்தை திணித்தனர். இதனால்தான் இந்த யுத்தம் தொடர்கின்றது என்பதை மறக்கமுடியாது.

அமைதிப் பேச்சின்மீதோ அல்லது தீர்வு யோசனை மீதோ அவர்களுக்கு விருப்பமில்லை என்பதைப் புலிகள் பல தடவைகள் காண்பித்துவிட்டனர்- என்றார் அமைச்சர். (அ-சி)

## விடுதலைப் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் பொதுமக்கள் மீதான தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். இந்நிலையில், அவர்களை அரசு தடை செய்ய வேண்டியது அவசியமாகியுள்ளது.

பேச்சுக்கு வருமாறு அரசு விடுத்த நல்லெண்ண வேண்டுகோளையும் புலிகள் இயக்கம் புறக்கணித்துள்ளது.

இந்நிலையில், அவர்கள் மீது பாரிய அழுத்தங்களை ஏற்படுத்துவதன் மூலமே அவர்களை பேச்சு மேசைக்கு அழைத்துவர முடியும். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டே அமைச்சரவை இதற்கான தீர்மானம் ஒன்றை முன்வைத்து அது குறித்து விவாதிக்கவுள்ளது - எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, விடுதலைப் புலிகளை அரசு தடைசெய்ய வேண்டிய அவசியமில்லையென வெளிவிவகார அமைச்சர் ரோஹிதபோகல்லாகம தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)


1st in Com, G.S.Q
யாழ்., பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
★ பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
★ புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
விபரங்கட்கு: செல்வி.S.அருள்தங்கை.
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.



நீங்கள் ஆவலோடு எதிர் பார்த்த
My Computer சஞ்சிகையின் 5 ஆவது
இதழ் இன்று முதல்!
வெளியீடு SPEEDIT NET 0214591871



பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year3-10)
Start on: 22.26.01.2008
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.



ICT Classes
For
Grade 10,11 & GIT
Commence on 22.01.2008
Medium : English / Tamil
P.R.Najan.B.Sc
150/2, Kulapiddy Junct.,
K.K.S.Rd.,Kokuvil.
T.P:- 0602214294/0773086808


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org